தரத்தினில் சிறந்த
மான் - முயல்
வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ

புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்
மு. நா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 10

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | கார்த்திகை 14 | முஹர்றம் 20 | இதழ் 290
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 29 - 11 - 80

RECEIVED
1980 -12- 1.
PERIODICALS DIVISION
JAFFNA CAMPUS

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி
புதியவகுப்புகள்
ஆரம்பம் 3-12-80
81ம் ஆண்டிற்கான
பௌதிக இரசாயனம்
சேதன இரசாயனம்
-அன்ரன்மாஸ்ரர்
இரண்டு பகுதிகளும்
தனித்தனி வகுப்புக்களாக
நடைபெறும்.
82 ம் ஆண்டிற்கான
தூயகணிதம்
பிரயோககணிதம்
-லோகேந்திரன்

## இத்தாலிய பூகம்பத்தினுல் இலங்கையர் எவரும் பாதிக்கப்படவில்லை!

### இலங்கைத் தூதுவர் அறிவிப்பு

(கொழும்பு)

தென் இத்தாலியில்இடம் பெற்ற பூகம்பத்தினுல் இலங்கையர் எவரும் பாதிக்கப்படவில்லை என்று இத்தாலியில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இத்தாலியில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. ஏ எப். விஜயமானே இது குறித்து இலங்கை வெளிநாட்டமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

பூகம்ப நிலை குறித்து உடனுக்குடன் அறியும் பொருட்டு தாம் இத்தாலிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வருவதாகவும் இலங்கையர் எவரும் இப் பூகம்பத்தினுல் பாதிக்கப் படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளதாகவும் அவர் இலங்கை வெளிநாட்டு அமைச்சுக்கு தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் இருக்கும் இலங்கை மக்களுடன் தாம் தொடர்பு கொண்டுள்ளதாகவும் திரு. விஜயமானே தெரிவித்தார்.

### 10 ஆயிரம்பேர் பலி!

இதே வேளையில் தென் இத்தாலியைக் கடந்த வாரம் உலுக்கிய பயங்கர பூகம்பத்தினுல் ஒரு மாகாணத்தில் மட்டும் 10 ஆயிரம் பேர் பலியானுர்கள் என்று நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுள்ள இராணுவ ஜெனரல் ஒருவர் தெரிவித்தார்.

நேப்பிள்ஸுக்கு அருகே அவலினோ மாகாணத்தில் 10 ஆயிரம்பேர்வரை பலியானுர்கள் என்று அந்த இராணுவ ஜெனரல் கூறினுர்.

இம்மாகாணத்தில் 100 நகரங்களும் கிராமங்களும் அழிந்துள்ளன என்றும் அவர் கூறினுர். (

# ஆசிரியர் பற்றுக்குறையிருக்க ஆபிரிக்காவுக்கு ஏற்றுமதியா?

## சபையில் 'அமிர்' கண்டனம்

(கொழும்பு)

இந்தநாட்டில் அரசாங்கங்கள் மாறும்போது மட்டுமல்லாமல் ஒரே அரசின் ஆட்சியில் கல்விஅமைச்சர்கள் மாறும்போதெல்லாம் கல்விக்கொள்கைகளும் மாற்றப்படும் துரதிர்ஷ்டமான நிலையில் நாம் இன்று இருக்கிறேம். இதனல் எமது எதிர்கால சந்ததியினர் பாதிக்கப்படுகின்றனர். இம்மாற்றங்களினுல் அதிகாரிகளுக்கும் ஆசிரியர் மாணவர்களுக்கும் எதுவுமே புரியாத நிலை ஏற்படுகிறது. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

"எமது நாட்டில் ஆசிரியர்களுக்குப் பெரும் பற்றுக்குறை இருக்கிறது. ஆங்கில ஆசிரியர்களை இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யவேண்டும்என்று ஜனதிபதி கூறியிருக்கிறுர். இதே வேளையில் எமது ஆசிரியர்கள் ஆபிரிக்க நாடுகளுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றனர். இந்நிலையைக தவிர்க்க அரசு உடன் நடவடிக்கை எடுக்வேண்டும்.

எதிர்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரை நிகழ்த்திய திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது;

ஆங்கில மொழி மூலம் சகல பாடங்களையும் போதிக்க வேண்டும் என்ற ஜனதிபதி

(10-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்துன்புறுத்தலினுல் 26 பேர் பார்வையிழந்தனர்

### இந்திய பாராளுமன்றத்தில் புகார்

பட்ன, நவ. 28

பீகார் மாநிலத்தில் பல குற்றச்செயல்களுக்காகக்கைது செய்யப்பட்ட 26 பேர் பொலிசாரின் துன்புறுத்தலினுல் பார்வையை இழந்துள்ளனர் என இந்திய பாராளுமன்றத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்திற்கும் அக்டோபர் மாதத்திற்கும் இடையில் கைது செய்யப்பட்ட 26 பேரினதும் கண்களில் கம்பிகளினுலும் ஊசி போடும் 'சிறிஞ்'களினுலும் பொலிசார் குத்தியதுடன் அவர்களது கண்களில் ஒருவகைத் திராவகத்தையும் ஊற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## ★ சட்டசபையை உடன் கூட்டவும்

## கருணுநிதியின்யோசனையை எம். ஜி. ஆர். நிராகரித்தார்!

புதுடில்லி, நவ. 28

விவசாயிகள் பிரச்னை தொடர்பாக விவாதிப்பதற்கு தமிழக சட்டமன்றத்தை உடனடியாக கூட்டவேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு. மு. கருணுநிதி விடுத்த வேண்டுகோளை முதலமைச்சர் நிராகரித்திருக்கிறுர்.

புதுடில்லியில் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை சந்தித்து முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமிழ் நாட்டின் பல்வேறு நெருக்கடிகள் குறித்துபேச்சுநடத்தினுர்.

இப்பேச்சுவார்த்தையின் பின்னர் திரு இராமச்சந்திரன் நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையில், நிருபர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே திரு கருணுநிதியின் ஆலோசனையை நிராகரித்தார்.

விவசாயிகள் பிரச்னையைத் தீர்த்து வைக்கக்கூடிய கருத்துக்கள் எதையும் சட்டமன்றத்தில் கூற திரு. கருணுநிதியோ அல்லது தி. மு. க உறுப்பினர்கள் யாராவது விரும்பினுல் அதனை தன்னிடமோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமோ கூறலாம். அதற்காக சட்டமன்றத்தைக் கூட்டவேண்டிய அவசியம் இல்லை என்றும்திரு. இராமச்சந்திரன் கூறினுர். (மு)



# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நாவற்குளி புகையிரத நிலையத்திற்கும் நாவற்குளிச் சந்திக்கும் அண்மையில் உள்ள கண்டிப் பிரதானவீதியில் பத்துப் பரப்பு வீடுகட்டக்கூடிய காணி உள்ளது. வாங்க விரும்புவோர் 263, நாவலர்வீதி, யாழ்ப்பாணம் இளைப்பாறிய ஆசிரியை வா. பரிமளத்துடன் தொடர்பு சொள்ளவும். 7465

யாழ்ப்பாணம்-பலாலி வீதி வசாவிளான் சந்தி தபால் கந்தோருக்குஎதிரில் வீடுகட்ட வசதியான 4 பரப்புக் காணியும் (கோட்டால் பிரிவிடல் செய்யப்பட்டது) 100 பரப்பு தச்சன்காடு என்னும் காணியில் 27 பரப்பும் விற்பனைக்கு உண்டு. விலை விபரத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 7455, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 7455

மல்லாகம் சந்தியிலிருந்து 100 யாருக்குள் காங்கேசன்துறை வீதியில் எல்லா வசதிகளும் கொண்ட ஆறு அறை வீடும் காணி 6 பரப்பும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் நந்தாவில், கொக்குவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. ச. சிவசுப்பிரமணியத்துடன் தொடர்பு கொள்ளவும். 7443

சொந்த பாவிப்பிலுள்ள வெஸ்பா ஸ்கூட்டர் 4 ஸ்ரீ விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி: சிவலிங்கம், "சாந்திமாலா", கே. கே. எஸ்.ரோட், கொக்குவில் சந்தி. 7460

பரந்தன்-முல்லைத்தீவு ரோட் ஓரமாக 9வது மைல் கட்டை அருகில் பதினொரு ஏக்கர் காணி முற்றாக வேலிபோடப் பட்டது. பகுதி மா, எலுமிச்சை, வாழை, தென்னை பயிரிடப்பட்டு நல்ல கிணற்றுடன் உண்டு. விளம்பரதாரர், 48 A, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: யாழ்ப்பாணம் 317. (7466)

புதிய நிலையில்உள்ள R 60 சிசில் குளிர்சாதனப் பெட்டியும் (ஸ்ராண்டுடன்) நாஷனல் பனசோனிக் 5310 ரேடியோ கசற்றும் உரிமையாளர் வெளிநாடு செல்வதால் விற்பனைக்குண்டு. தொடர்பு: 48 A, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; யாழ்ப்பாணம். 317. (7467)

## நன்றி நவிலல்

திருமதி கனகரத்தினம் கனகம்மா (பிரம்படி மலாயன் பென்சனியரின்பாரியார்) அவர்களின் சிவபதம் அடைந்த சடங்குகளில் (கந்தசஷ்டி முடிவில்) அன்பினுல் கலந்து கொண்ட அனைவருக்கும், பூமாலைகள் அளித்த அன்பர்களுக்கும், தந்தி, தபால் மூலம் அனுதாபச் செய்திகளை அனுப்பிய உறவினர், வேறும் பல விதமான உதவிகள் செய்த அன்பர்களுக்கும் எங்கள் இதய பூர்வமான ஆழ்ந்த நன்றியை பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம். தனித்தனியாக எங்கள் நன்றியை சமர்ப்பிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். கனகரத்தினமும் உறவினரும், 'கனக வாசம்' பிரம்படி, கொக்குவில். 7470

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# இன்றைய பலன்

கார்த்திகை மாதம்
14-ந் திகதி சனிக்கிழமை
(29-11-80)

மேடம்: கவர்ச்சிகரமான தினம், தந்தை வழியால் தனவரவிற்கும் இடமுண்டு. சில விடயங்களில் நீங்களே அதிகம் உணர்ச்சிவசப்படுவீர்கள், அடக்கம் நன்று.

இடபம்: பதவியில் இருப்பவர்களுக்கு உயர்வு கிடைக்கலாம், சிலருக்கு புதிதாகவும் தொழில் கிடைக்கலாம், வெளியிடத்துத் தொடர்புகள் வளர்வதற்கும் இடமுண்டு.

மிதுனம்: வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும், நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும், மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்

கடகம்: எதிர்பாராத வகையில் செலவுகள் அதிகமாகும், தொழில் முன்னேற்றம் தடைப்படும், பிணிக்கு இடம் கொடுக்காது சுகாதாரமாய் நடக்கவும்.

சிங்கம்; துன்பத்தின் ரேகைகள் படும், எதற்கெடுத்தாலும் சீறிவிழுவீர்கள், கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றம் அடைய நேரிடும்.

கன்னி; பிறருக்கு உதவ முன் நிற்பீர்கள், இதன் மூலம் பணம் செலவாகும், அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்ட தினம், இன்சொல் பேசி மற்றவர்களைக் கவர்வீர்கள்.

துலாம்: தற்பெருமையால் தடுமாற்றம் ஏற்படும், கண்துடைப்பு வேலைகளும் நடக்கும், பெரியோரைப் பகைத்துக்கொள்ளாமல் பெருமையைப் பேணி நடக்கவும்.

விருச்சிகம்! இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும், சிருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சர்ந்தப்பமும் ஏற்படலாம், தாய்வழிச் சுகமும் உண்டு.

தனுசு: வரவேற்கவேண்டிய சம்பவங்கள் இடம் பெறும், புத்திரர்களால் பெரும் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு, உள்ளத்தில் உவகை துள்ளும்.

மகரம்: வாகனம் செலுத்துவோர் இன்று மிகவும் கவனமாக இருக்கவும், அரசியல் வாதிகள் மிகவும் அவதானத்துடன் இருக்கவும், வரவிலும் இன்று தடைகள் உண்டு.

கும்பம்: வாழ்க்கை உற்சாகம் நிறைந்ததாக இருக்கும், புதிய எண்ணங்கள் தலை தூக்கும், களஸ்திரவழியால் பெருமைகள் வந்துசேரும், காதலர்களுக்கு கண்குளிர்ச்சியான நாள்.

மீனம்: அவசரப் போக்கினால் அதிகாரிகளைப் பகைத்துக்கொள்ள நேரிடும், எதற்கெடுத்தாலும் ஆத்திரப் போக்கு உண்டாகும். தவறான வழி மூலம் பணம் பாழாகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விளம்பரம்

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தில் ரகம் பிரிக்கப்பட்ட 2000 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கிறது. 15-12-80க்கு முன்னர் ரூ. 100/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும். கேள்விப் பத்திரங்கள் யாவும், 20-12-80 பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், வல்வெட்டித்துறை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப் படல்வேண்டும். உங்கள் கேள்விப்பத்திரங்கள் 24-12-80ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பார்வையிடப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி, ப. நோ. கூ. சங்கம்,
வல்வெட்டித்துறை.
7472

## அறிவித்தல்

வட இலங்கைச் சங்கீத சபை,
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

## 1981-ம் ஆண்டு சங்கீதப் பரீட்சைகள்

1. விண்ணப்பங்கள்: 16-1-1981 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பிந்திய விண்ணப்பங்கள்: அதற்குரிய கட்டணப் பணத்துடன் ரூபா 10/- மேலதிகமாகக் கட்டிய வங்கிப் பற்றுச்சீட்டுடன் 21-1-1981 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

3. செயன்முறைப்பரீட்சைகள் (Practical) : 1981-ம் ஆண்டு சித்திரை மாதம் பாடசாலை விடுமுறை காலத்தில் நடைபெறும்.

4. சாத்திரப் பரீட்சை (Theory) : செயன்முறைப் பரீட்சை முடிந்ததும் ஒரு சனி வாரத்தில் நடைபெறும் பரீட்சைகளுக்குரிய சரியான திகதிகள் பிரவேசச் சீட்டில் அறிவிக்கப்படும்.

பரீட்சைக் கட்டணம் எதுவித காரணம் பற்றியும் திரும்பப் பெறமுடியாது.

**முக்கிய குறிப்பு:**

5. (அ) சங்கீதப் பரீட்சைகளுக்குரிய பாடவிதானம் தற்போது புனரமைப்புச் செய்யப்படுகின்றது. இவ்வேலை பூர்த்தியாகி அச்சேற்றுவதில் சிறிது காலதாமதம் ஏற்படக்கூடும். எனவே எதிர்வரும் பரீட்சைகள் 1975-ம் ஆண்டு புனரமைப்புச் செய்த பாடவிதானத்திற்கமையவே நடைபெறும்.

(ஆ) பரீட்சார்த்திகளுக்குரிய சாதனைக் குறிப்பேடு தற்போது 100 பிரதிகள்வரை மட்டும் இருப்பில் உண்டு எனவே எதிர்வரும் பரீட்சைக்குக் குறிப்பேடு பெற இயலாதவர்கள், முதலாம் இரண்டாம் பகுதிப் பரீட்சார்த்திகள் தற்போது செய்வதுபோன்று, பாடவிதானத்திற்கமையத் தாம் பயின்றுள்ள உருப்படிகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டியல் ஒன்றைப் பிரதம பரிசோதகரிடம் சமர்ப்பித்தால் போதுமானது.

6. (அ) விண்ணப்பப் பத்திரங்களுக்கும் மற்றும் ஏனைய விபரங்களுக்கும் "தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை, கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்." என்னும் முகவரிக்கு முத்திரை ஒட்டி விலாசமிடப்பட்ட தபால் உறை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

(ஆ) நேரில் பெற விரும்புபவர்கள் சங்கீத ஆசிரியரின் கடிதம் கொண்டுவரல் வேண்டும்.

(இ) பூரணப்படுத்திய விண்ணப்பங்களைப் பதிவுத்தபாலில் அனுப்புவது உசிதம்.

க. சிவநாதன்,
வட பிரதேச
கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கைச் சங்கீதசபைத்
தலைவரும்

தொடர்பு இல: 1/B,
வட இலங்கைச் சங்கீதசபை
அலுவலகம்,
வித்தியாதிபதி,
யாழ்ப்பாணம்.
27-11-1980
7474

## நெல்லியடிப் பட்டினசபை

# கேள்வி அறிவித்தல் - 1981

நெல்லியடிப் பட்டினசபை விசேட ஆணையாளரால் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கீழ்க்காணப்படும் (1981-ம் ஆண்டின்) குத்தகைகளுக்கும் சேவைகளுக்குமான கேள்விகள் 1980 டிசம்பர் மாதம் 5ம் திகதி முற்பகல் 10-30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | பிணைப்பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|
| | ......... | .. ... |
| (1) மத்திய மரக்கறிச் சந்தை | 1000/- | 10/- |
| (2) மத்திய மீன்சந்தை | 1000/- | 10/- |
| (3) கோவிற் சந்தை | 100/- | 10/- |
| (4) குப்பை அகற்றுவதற்கான டிரக்ரர்சேவை | 100/- | 10/- |
| (5) குப்பை அகற்றுவதற்கான இரட்டை மாட்டு வண்டில் சேவை | 100/- | 10/- |

கேள்விப்பத்திரங்கள் 4-12-1980-ம் திகதி முற்பகல் 10-30 மணிவரையும் நெல்லியடிப் பட்டினசபை அலுவலகத்தில் வழங்கப்படும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் உள்ளடக்கப்பட்டவைகளாகவும், இடதுபக்க மேல்மூலையில் சமர்ப்பணம் செய்யப்படும் கேள்வியின் பெயர் குறிப்பிட்டனவாகவும் இருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அலுவலகத்தில் அதற்கெனவுள்ள பெட்டியில் போடப்பட்டோ அல்லது பதிவுத்தபால்மூலமோ அனுப்பப்படல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் முற்றாகவோ, பகுதியாகவோ ஏற்றுக் கொள்ளவும், நிராகரிக்கவும் பட்டினசபை விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

இது தொடர்பான மேலதிகமான தகவல்களை கடமை நேரங்களில் இவ்வலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

பி. எம். யோசெப்
விசேட ஆணையாளர்,
நெல்லியடிப் பட்டினசபை.

பட்டினசபை அலுவலகம்,
நெல்லியடி, சரவெட்டி,
18-11-1980.
7473

## Isuzu Journey–Nissan Civilian

26 ஆசனங்கள் கொண்ட மினிபஸ்கள் ஜப்பானிலிருந்து எம்மால் தருவிக்கப்பட்ட 1977 — 1978-ம் ஆண்டு மொடல்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்:

**பிள்ளையார் ஸ்டோர்ஸ்**

**31, மானிப்பாய் வீதி, யார்ழ்ப்பாணம்.**

**தொலைபேசி இல: 7166** 7458

## பண்டத்தரிப்பு கிராமாட்சி மன்றம்

# கேள்வி விளம்பரம் - 1981

1981-ம் ஆண்டுக்கான பின்வரும் குத்தகைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 11-12-80-ந் திகதி காலை 10-00 மணி வரை என்னல் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் | 1980-ம் ஆண்டின் கேள்வித் தொகை |
|---|---|---|---|
| | ...... | ......... | ......... |
| 1. மாதகல் சந்தை | 100-00 | 25-00 | 5001-50 |
| 2. விளான் சந்தை | 100 00 | 25-00 | 940-60 |
| 3. இளவாலை சந்தை | 100-00 | 25-00 | 3300-00 |
| 4. மாகியப்பிட்டி சந்தை | 100-00 | 25-00 | 2700-75 |
| 5. மாதகல் இறைச்சிக் கடை | 100-00 | 25-00 | 1790-00 |
| 6. இளவாலை இறைச்சிக் கடை | 100-00 | 25-00 | 5150-12 |
| 7. மாகியப்பிட்டி இறைச்சிக் கடை | 100-00 | 25-00 | 320-00 |

இவ்வலுவலகத்தில் 9-12-80-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரைக்கும் வழங்கப்படும் கேள்விப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்கவேண்டும். கேள்விப்பத்திரப்பணம் மீளளிக்கப்படமாட்டாது மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

கி. கோபாலரத்தினம்,
விசேட ஆணையாளர்,
கிராமசபை,
பண்டத்தரிப்பு.

கிராமாட்சி மன்ற
அலுவலகம்,
பண்டத்தரிப்பு,
1980-11-26.
7471

# "பொது எதிரியை தனிமைப்படுத்துவதே 5 கட்சிக்கூட்டின் இலட்சியம்"

## கருத்தரங்கில் 'சண்' விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"சீனாவில் இன்று மோசமான சீரழிவு வேலைகளைச் செய்து கொண்டு, சர்வதேசத்திலும் தங்களுக்கு சாதகமான சீர்குலைவுக் கும்பல்களை இன்றைய சீன ஆட்சியாளர் போஷித்து வருகின்றனர். உண்மையான மாக்ஸிஸ்டுகளைக் காட்டிக் கொடுக்கும் பணியிலிறங்கி தமது கையாட்களை அமெரிக்க ஏகாதிபத்தியக் கையாட்களுடன் சேர்த்து விட்டுள்ளனர். இதனை இன்று சர்வதேச ரீதியாகச் சீனச் சீரழிவுத் தலைமை நடைமுறைப்படுத்துகிறது. இதனையிட்டு உண்மையாக மாக்ஸிச லெனினிச மாவோ வழிநிற்பவர்கள் கலக்கமடையத் தேவையில்லை. சர்வதேச ரீதியாக திரிபுவாதம் சீர்குலைவுவாதம் தலையெடுத்த போதெல்லாம் சரியான கொள்கையில் மாக்ஸிச லெனினிச மாவோவழியில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாக நிற்கத் தவறியதில்லை. இந்த வகையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வரலாறு உண்டு"

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப்பொதுச்செயலாளர் திரு. என். சண்முகதாசன் யாழ். பிரதேசகட்சி அங்கத்தவர்கள் ஆதரவாளர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார் கட்சியின் வடபிரதேசப் பிரமுகர் ஜனாப் எம். ஏ. சி. இக்பால் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு சண்முகதாசன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது

"மாக்ஸிச லெனினிச மாவோவழி நிற்கும் அதேவேளை அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தையும் இன்றைய சீனத் திரிபுவாதப் பாதையினையும் கண்டிக்கும் உலகெங்குமுள்ள புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சிகள் அண்மையில் ஒன்றுகூடி ஒரு சர்வதேச அமைப்பினை ஏற்படுத்தியுள்ளன. அந்த அமைப்பில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பெரும் பங்குண்டு. கஷ்டங்களுக்கு மத்தியில் செயற்படுபவர்கள் முன்னேறுபவர்களே மாக்ஸிஸ்டுகள்

எனவே எத்தகைய கஷ்டத்தின் மத்தியிலும் நம்நாட்டில் தொழிலாள வர்க்கத் தலைமையை வலுப்படுத்தி போராட்டப்பாதையில் மக்களை அணிதிரட்ட வேண்டும்.

'இன்று ஏற்பட்டுள்ள ஐந்து கட்சிக்கூட்டு எந்தவிதயான விட்டுக்கொடுப்புகளும் இல்லாத ஒவ்வொரு கட்சிக்குமுரிய தனித்துவமும் சுயமான முன்னேட்டமும் கொண்ட செயற்பாட்டோடு பொதுப் பிரச்னைகளையொட்டி காணப்பட்ட ஒருமைப்பாடேயாகும். இது இன்றைய நிலையில் பொது எதிரியைத் தனிமைப்படுத்த மேற்கொண்ட ஒரு இலட்சிய நடவடிக்கையாகும்' என்று கூறினர்.

# அக்டோபர் புரட்சிதினம் சுபசிங்கா கலந்துகொள்கிறார்

(யாழ்ப்பாணம்)

மாபெரும் அக்டோபர் புரட்சியின் 63-வது ஆண்டு நிறைவு தினப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்நடைபெறும்.

திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், முன்னாள் அமைச்சரும் இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கத்தின் தலைவருமான திரு. டி. பி. சுபசிங்கா, மானிப்பாய் எம். பி. திரு. வி. தருமலிங்கம், யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், திரு. அ. வயித்திலிங்கம், திரு எம். சி. சுப்பிரமணியம், திருமதி பத்மா சிவகுருநாதன் உட்பட பலர் உரையாற்றுவார்கள்.

இக்கூட்டத்தில்; இலங்கையிலுள்ள சோவியத் ஸ்தானிகராலயப் பிரதிநிதியும் கலந்து கொள்வார்.

# சோதிட ஆய்வு மன்ற ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சோதிடஆய்வு மன்றத்தின், ஆய்வரங்கொன்று நாளை

9-ம் பக்கம் பார்க்க)

# 100-வது கதாப்பிரசங்கம்

(பரந்தன்)

முத்தமிழ்ச் செல்வி ராதா சோமசுந்தரத்தின் 100வது கதாப்பிரசங்கத்தையிட்டு புளியங்குளம் ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானத்தில் நடந்த விழாவில் டாக்டர் திருமதி சாந்தி இராசசுந்தரம் அன்னாருக்குத் தேவஸ்தானத்தின் சார்பில் 'முத்தமிழ் வித்தகி' என்னும் பட்டத்தை வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினர்.

அவர் தமது பாராட்டுரையில் தெரிவித்ததாவது:-

"1958ம் ஆண்டு தொடக்கம் கதாப்பிரசங்கத்தொண்டில்ஈடுபட்டு முன்னணியில் திகழும் செல்வி ராதா ஈழத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் முதல் பெண் கதாப்பிரசங்கியாவார். இந்நிகழ்ச்சி மூலம் முத்தமிழை வளர்த்துவரும் முத்தமிழ்ச் செல்விக்கு முனீஸ்வரன் தேவஸ்தானம் சார்பில் 'முத்தமிழ் வித்தகி' என்ற சிறப்புப் பட்டத்தை அளிப்பதோடு அன்னாருக்கு பொன்னாடையை போர்த்தி கௌரவிப்பதில் பெருமைப்படுகின்றேன:

கிளிநொச்சி சென் திரேசா மகளிர் கல்லூரி அதிபரான செல்வி ராதாவின் கதாப்பிரசங்க சேவையை ஈழ துச் சைவத் தமிழ் உலகம் நன்கு அறியும். கலைமாணி பட்டதாரியான இவர் யாழ். பல்கலைக் கழகத்தின் முதுமாணிப்பட்டப் படிப்பு இறுதியாண்டு வெளிவாரி மாணவியாவார். அவரது சைவ, தமிழ் சேவை மேலும் சிறப்புறுவதாக." (அ)

# யோகாசன நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யோக சபா நடாத்தும், யோகாசன நூல் வெளியீட்டுவிழா தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அமுதசுரபி மண்டபத்தில் இம்மாதம் நாளை மாலை நடைபெறவிருக்கிறது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் முன்னாள் யாழ். அரசாங்க செயலக அலுவலக உதவியாளர் திரு. இ. சபாரத்தினம் எழுதிய 'இலகுஆசனப்பயிற்சிகள்' என்ற நூலை பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் வெளியிட்டு உரைநிகழ்த்துவார்.

திரு. க. கனகராசா, திரு. தா. சிவசுப்பிரமணியம் ஆகியோர் மதிப்பீட்டுரை வழங்குவார்கள்.

நல்லை ஆதீனத்தைச் சேர்ந்த திரு. செ. த. முருகானந்தா, யோகாசனம், செயல்முறையில் விளக்குவார். (ச)

# தாழ்வுபாடுவில் பஸ் டிப்போ

(மன்னார்)

மன்னார், தாழ்வுபாடு என்னுமிடத்தில் 8 லட்சம் ரூபா செலவில் புதிய பஸ் டிப்போ நிறுவப்பட்டு வருகிறது. மன்னார் பஸ் டிப்போவில் தற்போது நிலவி வரும் குறைபாடுகளை நீக்கும்பொருட்டே இப்புதிய பஸ் டிப்போ நிறுவப்பட்டு வருகிறது.

# கோவில்மரங்கள்திருடினாராம் 9-ம் திகதிவரை றிமாண்ட்

(பண்டத்தரிப்பு)

கோவிலுக்கு கொட்டகை அமைக்க வைக்கப்பட்டிருந்த 1,400 ரூபா பெறுமதியான மரங்களை, இரவு நேரத்தில் களவாடி விற்பனை செய்ததாகக் குற்றம்சாட்டி ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் ஆஜர் செய்யப்பட்ட நபர் ஒருவரை யாழ். நீதிமன்ற நீதிபதி அடுத்த மாதம் 9ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

ஆனைக்கோட்டை சிவன் கோவிலில் வைக்கப்பட்டிருந்த மேற்படி மரங்களை திருடி விற்றதாக ஆனைக்கோட்டை வாசியான நவரத்தினம் தியாகராசா என்பவரை பொலிசார் தேடியபோது அவர் தலைமறைவாகிவிட்டாராம். பின்னர் பொலிஸ் சார்ஜன்ட் ரி. திருவிளங்கம், கான்ஸ்டபிள் கே. பஞ்சாட்சரம் ஆகிய இருவரும் இந்த நபரை முள்ளியவளையில் வைத்து கைதுசெய்தபோது, தான் களவாடிய மரங்களை தர்மலிங்கம் யோகசித்தன், தர்மலிங்கம் யோகநாதன் ஆகிய இரு சகோதரர்களுக்கு விற்பனை செய்ததாகக் கூறினாராம். மரங்களைப்பற்றிய பொலிசார் பிரஸ்தாப நபரை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி திரு. ரி. ஜோகநாதன் அவரை அடுத்த மாதம் 9ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு; உத்தரவிட்டார்.


# மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்டில் உங்கள் சேமிப்பினை முதலிடும்போது நீங்கள் அடையும் நன்மைகள் பலவிதம்

மொத்த ஆதனம் ரூபா 25 கோடிகளுக்கும் மேலாகக்கொண்டு
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையின் மிகப்பெரிய நிதி நிறுவனமாக விளங்குகிறது.
மூலதன ஒதுக்கீடுகளும் முன் ஏற்பாடுகளுமாக ரூபா 3 கோடிக்கும் கூடுதலாகக் கொண்ட
உறுதியான நிதி நிறுவனம் மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்,
தனியார் வைப்புக் கணக்காக 15 கோடிக்கும் அதிகமாகத் தன்னகத்தே கொண்டு
பொது மக்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகத் திகழும் நிறுவனம்
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்.
உங்கள் வசதிக்கேற்ற வகையில் தெரிவு செய்ய வல்ல முதலீட்டு திட்டங்கள்
மாதாந்தமோ அல்லது முதிர்ச்சியின் பின்னரோ பெறக் கூடிய கவர்ச்சிகரமான வருமானம்

## ஒரு வருட வைப்புத் திட்டங்கள்

| | |
|---|---|
| மாதாந்தம் செலுத்தப்படுவது | 20% |
| முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது | 22% |

அதி குறைந்த வைப்புத் தொகை ரூபா 2,500/-

## இரு வருட வைப்புத் திட்டங்கள்

| மாதாந்தம் செலுத்தப்படுவது | | முதிர்ச்சியின் பின்னர் செலுத்தப்படுவது | |
|---|---|---|---|
| ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/- ற்கும் கீழ் | 21% | ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/- ற்கும் கீழ் | 24% |
| ரூபா 50,000/-ல் இருந்து ரூபா100,000/- ற்கும் கீழ் | 22% | ரூபா 50,000/-ல் இருந்து ரூபா 100,000/- ற்கும் கீழ் | 25% |
| ரூபா 100,000/- ல் இருந்து அதற்கும் மேல் | 24% | ரூபா 100,000/- ல் இருந்து அதற்கும் மேல் | 27% |

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்
இலங்கையின் மிகப்பெரியதும் உறுதிவாய்ந்ததுமான நிதி நிறுவனம்.
51-53, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி 26611-19
கிளைகள்: யாழ்ப்பாணம்: 11/8 ஸ்டான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை 27-1/1, தர்மபால மாவத்தை, தொலைபேசி 2466
அனுராதபுரம் 2, ஹரிச்சந்திரா மாவத்தை. தொலைபேசி 534
கண்டி 901/A பேராதனை வீதி. தொலைபேசி 4196
செயற் துணைவர்கள் (ஏஜன்ட் மார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

"மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்

MASTERS

**மணிவாக்கு**

ஞானமே பரம்பொருளின் தன்மை, எனவே ஞானத்தைப் பெறு; விடுதலையடை.
—சுவாமி சிவானந்தர்

# நமது நோக்கு

## கெடுபிடி யுத்தம்

நெருப்பில்லாமல் புகை வராது. வெறும் புகார் புகைபோலத்தெரியும். எது புகை எது புகார் என்பதைத் தெளிவுபடுத்தவேண்டியது அரசின் முக்கிய கடமை.

நாம் குறிப்பிடுவது பாராளுமன்றத்தில் நாட்டின் வெளிநாட்டு விவகாரங்களைப்பற்றி எழுந்த பிரச்னையே.

இந்துசமுத்திரத்தில் வல்லரசுகளின் நடமாட்டம் பற்றி முன்பு குறிப்பிட்டிருந்தோம். அது பற்றி இந்தியாவும் இலங்கையும் மௌனம் சாதித்தால் அவர்களின் நடுநிலைமைக் கொள்கையில் சந்தேகம் ஏற்படுவது இயற்கை.

அவ்வித சந்தேகத்துக்குத் தூபமிடுவதுபோல் இருவித வதந்திகள் நாட்டில் பரவலாய் உலாவுவது எங்கள் கொள்கைக்குப் பங்கம்விளைவிக்க வல்லது.

ஒன்று அமெரிக்கா பற்றியது. திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்த அரசு வசதிகளை அனுமதிக்கக்கூடுமென்பது. மானிப்பாய் எம். பி. இதனைக் கேள்வியாக எழுப்பியபோது வெளிவிவகார அமைச்சர் ஹமீத் அதனைத் திட்டவட்டமாக மறுத்திருக்கிறார்.

அணிசேரா இயக்கத்தில் முக்கிய இடம் வகிக்கும் இலங்கை இந்துசமுத்திரத்தின் பாதுகாப்புக்குப் பெருமுயற்சி செய்யும் எங்கள் நாடு அத்தகைய பொறுப்பற்ற செயலில் எவ்வாறு இறங்கும்?

இருந்தும் வதந்திகளை மக்கள் நம்பிவிடாமல், காலத்திற்குக்காலம் அரசு தெளிவுபடுத்துவது அவசியமென்று மானிப்பாய் எம். பி. சரியாக வற்புறுத்தியிருக்கிறார்.

எங்கு பார்த்தாலும் யுத்தத்தின் பேச்சே இடம் பெறுகின்றது, எதிர்பாராத வண்ணம் ஈரான் - ஈராக் யுத்தம் நீடித்துக்கொண்டு போகின்றது. அணிசேரா இயக்கத்தில் அங்கம் வகிக்கும் இருநாடுகளின்போரை இன்னும்நிறுத்த'எவராலும் முடியவில்லை.

இதுமட்டுமா? இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி பாகிஸ்தானிலிருந்து எந்நேரமும் ஆபத்து நேரலாம் என லோகசபையில் எச்சரிக்கை விடுத்துள்ளார். பாகிஸ்தான் வெளிநாடுகளிலிருந்து பெருமளவில் ஆயுதம் பெற்றுக் குவித்துவருவதான செய்தியைக் கொண்டே இந்த எச்சரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

நாடு எதுவென்று நாம் யூகிக்க முடியும். யுத்தத்தை உணர்ந்துஇந்தியாவும்உதவிகளைப் பெற்றுதயார்படுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவுக்கு எங்கிருந்து உதவி கிடைக்குமென்பதையும் நாமறிவோம்.

''சமாதானம் வேண்டுமானுல் சண்டைக்குத்தயாராக விரு'' என்று ஒரு பழைய ஆங்கிலப் பழமொழிஉண்டு. உலக சமாதானத்திற்கு உழைத்த உலகம் வணங்கும் பெரியோர்கள், -காந்தி உட்பட- இதனைக் கேலி பண்ணியிருப்பதை நாம் நினைவுகொள்ள வேண்டும்.

சண்டை, சமாதானம் இவை இரண்டும் மக்கள் மனதிலேயே உருவாகின்ற உணர்வுகள். பேச்சில் முளைத்து செயலில் முடிவு பெறுகின்றன. சண்டைக்குத் தயாராகும் எவரும் சமாதானத்தைக் கருத்திற் கொள்வதில்லை.

இது இவ்வாறிருக்க, பழைய சித்தாந்தத்தையே வல்லரசுகள் கடைப்பிடிக்கின்றன. யுத்த ஆயுதங்களைத் தயாரித்துக் குவித்து. தமக்கிசைந்த நாடுகளுக்கு உதவி, விற்பனை செய்து கொண்டு, யுத்த ஆயுதக் கட்டுப்பாடு பற்றிப் பேசி உலகை ஏமாற்றுகின்றனர்.

இந்துசமுத்திரத்திலேயே இவை வேட்டையாடுகின்றனர் என்ருல், உலக நாடுகள் மூன்ரும் உலகயுத்தம் ஒன்று வெடித்தால் எப்பக்கம் சாருமென நினைக்க நடுக்கம் ஏற்படுகிறது.

சோஷலிசநாடுகள், முதலாளித்துவ நாடுகள் இன்னொரு புறமென்று சொல்லிவிடலாமா? மடைமை. நவசீனு இப்போது எங்கு நிற்கிறது. அணிசேரா நாடுகளை ரஷ்யா சும்மா விருக்க விடுமா? புதிய ஜனுதிபதிறீகனின் ஆட்சியில், ரஷ்யா கம்யூனிசத்திற்கு விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு விருத்தியடையுமா? இன்று பொருளாதாரத்திலும், தொழில்வளத்திலும் முன்னணியில் நிற்கும் ஜெர்மனி, ஜப்பான் எவ்வாறு நடந்து கொள்ளும்?

அமெரிக்கஆயுத உதவியுடன் பாகிஸ்தான் சண்டைக்கெழுந்தால் இந்தியா ரஷ்ய உதவியை நாடாதா? அந்நிலையில் நாமென்ன செய்வோம்? அணிசேரா நாடுகள் எவ்வாறு நடந்து கொள்ளும்? அரபு நாடுகளின் ஒற்றுமை குன்றி நிற்கும் இவ்வேளையில் அவை எவ்விதம் தொழிற்படும்?

அகில உலகமும் ஒரு பொழுதில் அழிய இலகுவான வழிபிறந்திருந்தாலும், வல்லரசுகள் நல்லரசுகளாக விருக்காவிடினும் விவேகமாக நடந்து கொள்ளப் பழகிக்கொண்டனர்.

சிறு நாடுகளைத் தட்டிவிட்டு உள்நாட்டில் வசதிக்காகக் காலூன்றி மறைமுகமாக வேண்டுமானுல் நேர்முகமாக ஆதிக்கஞ் செலுத்த முயல்கின்றனர்.

நடு நிலைமையிலிருந்து அசையாது மிகவிழிப்புணர்வுடன் இருப்பதே விவேகமானது.

இன்று குருபூசை

# நாவலர் தமிழின்காவலர்

''உலகில் உள்ளது ஒரே சூரியன், ஒரே சந்திரன்; அதுபோன்று தமிழ் உலகில் புகழ் பரப்பிப் பிரகாசிப்பவர் ஒரே நாவலரே'' என்று ஓர் இந்தியப்பேரறிஞர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானின் பெருமையைக் கூறிப்போந்தார்.

''கோடிக்கணக்கான தமிழ் இனத்தவருள் ஒப்பற்றவராக யாழ்ப்பாணத்திலே பிறந்து, பேச்சுக்கலையில் சிறந்து நாவலர் என்ற பெரும் பட்டம் பெற்றவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஒருவரே. அவைக்கண் அஞ்சாது பேசும் ஆற்றலும், எஞ்சாத நூற்புலமையும் எவரும் விஞ்சாது வாதிடும் வன்மையும், செஞ்சொல் செல்வருள் தலைமையும் ஒருங்கேகொண்டு மும்மொழி வாணராய் இலங்கிய நாவலர் இவர் ஒருவரைவிட தமிழ் கூறும் நல் லுலகில் வேறொருவர் இதுகாறும் தோன்றவில்லை'' என்பது மற்றுமோர் இந்தியத் தமிழறிஞரின் கருத்தாகும்.

நாவலர்கள் பலர் இந்தியாவிலும் ஈழதேசத்திலும் தோன்றிப் புகழ்பெற்றதுண்டு. எனினும் 'ஊழிபெயரினும் தாம் பெயராச் சான்ருண்மையும், தோலாத நாவன்மையும் ஒருங்கேபெற்றுப் புகழ் நிறுவியவர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் ஒருவரே. நாவலர்கள் நடுவேஅவர் நாயகமணியாகத் திகழ்ந்தபடியால் 'நாவலர் பெருமான்' என்றும், சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்கள் போன்று உடல்பொருள் ஆவி அனைத்தையும் ஈந்து வளர்த்த

—ம. நமசிவாயம்—
(செயலாளர், சைவமிஷன்)

காரணத்தால் ''ஐந்தாம் குரவர்'' என்றும் தமிழுலகம் அவரைக் கௌரவித்து இதயத்தில் வைத்துப் போற்றுகின்றது. பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் நாவலரைத் தெய்வமாக யாழ்ப்பாணத்தில் போற்றிப் புகழ்வதற்கும், அவருடைய தியாகவாழ்வு பற்றிய உருக்கமான செய்திகளை அடிக்கடி சொல்லிச் சமுதாயத்துக்கு தியாகக்கனல் மூட்டுவதற்கும், குன்றின் மேலிட்ட தீபம் போன்ற அவரது நேரிய சீரிய வாழ்வே காரணமாகும். செந்தமிழ்துறவி விபுலானந்த சுவாமிகள் நாவலர்பெருமானுடையபெருமைபற்றி இந்தியாவில் கல்விகற்பித்தபோதுதமது இந்தியச் சர்வகலாசாலைமாணவர்களுக்குத் அடிக்கடி எடுத்துரைத்து வியந்து பாராட்டியதை இந்தியத் தமிழறிஞர் மூலம் அறிகின்றபோது ஈழநாட்டுத் தமிழ் மக்கள் களிபேருவகை அடைகிருர்கள்.

### நாவலர் உருவாக்கிய யாழ்ப்பாணத் தமிழ்

சில வருடங்களுக்கு முன் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் சகோதரருடைய மகள், யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த பத்திராதிபர் ஒருவருடைய குடும்பத்துடன் கதிர்காம யாத்திரை செய்ய வந்திருந்தார். இராமகிருஷ்ணமடத்தில தங்கி இருந்த சமயம் அம்மையாருடன் சிறிது நேரம் பேசும் வாய்ப்புக் கிட்டியது. நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன் என்பதை அறிந்ததும், உங்கள் யாழ்ப்பாணத்துத் தமிழ்தான் தமிழுலகில் சிறந்த பேச்சுத்தமிழ். யாழ்ப்பாணத்தவர்கள் சிறந்த இலக்கண விதி வழுவாது புத்தகத்தில் உள்ளது போலவே பேசுகிருர்கள். இந்தியாவிலே சிறந்ததெனப் புகழப்படும் திருநெல்வேலியில் வழங்கும் செந்தமிழ் கூட யாழ்ப்பாணத் தமிழுக்கு அடுத்தபடியாகவே உள்ளது. இதற்குக் காரணம் ஆறுமுகநாவலர் பெருமான் செய்த தமிழ்த்தொண்டுதான்'' என்று கூறினுர். இவ்வாறு இன்றும் தமிழ் நாட்டில் பற்பல இடங்களிலும் யாழ்ப்பாணத்தைப் பற்றி மிக உயர்ந்த எண்ணத்தை ஏற்படுத்தியவர் நாவலர் பெருமானன்ருே.

### வசனநடையின் தந்தை

சென்ற நூற்ருண்டில் தமிழ்

(5ம் பக்கம் பார்க்க)

# நாடும் நடப்பும்....

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுப்பதில் ஏஜன்சிகள் என்ற பெயரில் டல மோசடிகள் நடைபெறுவதாகப் பொலிசில்புகார்கள் செய்யப்பட்டிருப்பதுடன் சிலர் நீதிமன்றத்திலும் நிறுத்தப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

இப்பொழுது வேலைவாய்ப்புத் தேடிக்கொடுப்பதில் புதுவித மோசடியொன்றும் நடைபெறுகிறதாம்.

வெளிநாடு ஒன்றிலிருந்து ஒருவர் எழுதிய கடிதத்தில் பின்வரும் தகவலைத் தெரிவித்திருக்கிருர்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த ஒருவர் தனது டிக்கட் கொமிஷனுக்காக வெளிநாடொன்றுக்கு டிக்கட் எடுத்துக்கொடுக்கிருர், கட்டுநாயகா விமான நிலையத்துக்கு அவர்களை அழைத்துச்சென்று விமானம் ஏறுவதற்கு முன்பாக, ''நீங்கள் நல்லா வருவதும் கெட்டுப் போவதும் உங்களைப் பொறுத்தது. நல்லா வந்தாலும் என்னை ஏசாதையுங்கோ, கெட்டுப்போனுலும் என்னை ஏசாதையுங்கோ'' என்று வாழ்த்துக்கூறி வழியனுப்பி வைக்கிருராம். இப்படி இவரால் வழிஅனுப்பிவைக்கப்பட்டவர்கள் பெரும் கஷ்டப்படுவதாகவும் கண்ணீர்விடுவதாகவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(5-ம் பக்கம் பார்க்க)


வொலரோன் ஈ. சீ. 50%

வொலரோன் ஒரு சர்வபூச்சி நாசினி. மிளகாய், வெங்காயம் மற்றும் காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் தத்துவெட்டி, வெட்டுப்புழு முதலாம் சகல தரைப் பூச்சி புழுக்களையும் ஒழித்துக்கட்டும், மிளகாய், வெங்காயப் பயிர்க் கம்பளப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதில் விசேஷ சக்தி வாய்ந்தது வொலரோன்.

பாவியுங்கள்
BAYER
தரமான பீடைநாசினிகள்




ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
தொலைபேசி: 93563, 96331-6

MelAds

200 மி. லீட்டர் ரூபா 45-00

## நாடும் நடப்பும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்நகரில் ஒரு கொமெய்னி பற்றி சில தினங்களுக்குமுன் எழுதியிருந்தேனல்லவா? அது பற்றி இப்படியொரு கடிதம் வந்திருக்கிறது. பண்டத்தரிப்புப் பட்டினசபையில் பணியாற்றும் வ. சு. ஸ்ரீபவன் என்றும் அன்பர் எழுதியுள்ள கடிதம் இது.

யாழ்நகரில் ஒரு கொமெய்னி என்ற தலைப்பில் 25-11-80ம் திகதி தங்கள் பத்திரிகையில் 'நாடும் நடப்பும்' பகுதியில் குறிப்பிட்டிருந்தீர்கள். வாசித்தேன்; மகிழ்ச்சியடைந்தேன். காரணம் அப்படியான ஒரு அங்கத்தவரை யாழ் மாநகர சபை பெற்றதையிட்டா என்றால் இல்லை. உண்மையை அப்படியே கணித்து எழுதியிருந்தீர்கள் என்பதையிட்டே மகிழ்ச்சியடைந்தேன்.

யாழ். மாநகரசபைப் பகுதியில் வாழும் மக்கள்மட்டுமல்ல, யாழ். மாநகரசபை ஊழியர்கள் மத்தியிலும் அவருக்கு பெருமதிப்பு உண்டு என்பதை நான் அங்கு கடமையாற்றிய காலத்தில் அறியமுடிந்தது. இத்தனைக்கும் காரணம், அவரது அரைத்தாடியல்ல; அவரது இனிமையான குழந்தை முகமும், தூய்மையான அன்பான உள்ளமுமே என்றால் மிகையாகாது.

மாநகரசபை அங்கத்தவர் என்ற பெருமையை வாகன வசதியாலோ, உடையாலோ கர்வத்தாலோ காட்டிக்கொள்ளாத ஒரு சாதுவாகச்செயல்படுவது மற்றைய உறுப்பினருக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். இப்படியாக சகல அங்கத்தவர்களும் இருப்பின், வரியிறுப்பாளர், ஊழியர்கள் யாவரும் அன்புடன் வரவேற்பர், பணிபுரிவர் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை''.

0 0 0

வெட்ட வெட்டத் தழைக்கும் மயில்ராவணன்போல கொழும்பு நகரில் கோட்டை, புறக்கோட்டைப் பகுதிகளில் நடைபாதை வியாபாரிகள் முளைத்துக்கொண்டேயிருக்கிறார்கள். சில வீதிகளிலிருந்து அவர்களை வேறு இடத்துக்கு மாற்றிப் புதிய கட்டிடங்களில் அமர்த்தினாலும் பழைய படியும் பழைய இடத்தில் புதிய நடைபாதை வியாபாரிகள் காட்சியளிக்கின்றனர்!

இது யாழ் நகரிலும் பெரிய கடைப் பகுதியிலும் ஆஸ்பத்திரிக்கு அண்மையிலும் சிறிது சிறிதாக வளரத் தொடங்குகிறது. முளையிலேயே இதற்கு உரிய நடவடிக்கையை யாழ் மாநகரசபை மேற்கொள்வது நல்லது!

— ஊர்சுற்றி

## நாவலர் தமிழின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நூல்கள் பெரும்பாலும் செய்யுள் நடையில் பொதுமக்களுக்கு இலகுவில் விளங்காத பொங்கிஷங்களாக இருந்தன. நாவலர் நூல்களை வசனநடையில் எழுதினார். அரிய நூல்களுக்கு உரை எழுதினார். சைவ வினாவிடை, பாலபாடம் போன்ற நூல்களை அச்சில் பதிப்பித்தார். இத்துறையில் வெற்றிகண்ட நாவலரை அறிஞர்கள் ''உரைவேந்தர்'' என்றும் ''வசனநடை கைவந்த வல்லாளர்'' என்றும் போற்று கின்றார்கள். தமது தொண்டு சிறக்க நாவலர் பெருமான 1849-ம் ஆண்டு வண்ணார் பண்ணையில் ''வித்தியாநுபாலன யந்திரசாலை'' என்னும் அச்சகம் அமைத்து நூல்களை வெளியிட்டார்.

### நாவலரது சொல்வன்மை

பாதிரிமார் பிரசங்கங்கள் மூலம் மக்களை மதமாற்றம் செய்வதைக்கண்ட ஆறுமுகனார் தாமும் அவ்வாறே சைவ உண்மைகளைப் பொதுமக்களுக்குப் புகட்ட முதலில் 1849ம் ஆண்டு வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் சைவப்பிரசங்கத்தை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று பிரசங்கமூலம் மக்களை நல்வழிப்படுத்தியபின் இந்தியாவுக்கும் சென்று பல இடங்களில் கேட்டார்ப்பிணிக்கக்கூடியவாறு சொற்பொழிவுகள் பல செய்தார். திருவாவடுதுறை ஆதீனத்தில் பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை தலைமையில் 'நாவலர்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

### சிவபூசை நியமம்

பரிபூரணராகி இறைவனுக்குப் பூரண அடிமைத்தொண்டு செய்து வாழ்வோர் பூமியில் எவருக்கும் அடிமை செய்ய விரும்பமாட்டார். இதை அப்பர் சுவாமிகள் வாழ்விலும் மகாகவி பாரதியார் வாக்கிலும் நாம் அறியலாம். தினசரி சிவபூசை தவறாது நியமமாகச் செய்த நாவலர் பெருமான் சிவதீட்சை பெறாத சில தில்லை வாழ் அந்தணர்களுடன் நீதி மன்றத்தில் கூட வழக்காடி வெற்றிபெற்றார். அடியார்களிடம் அளவிறந்த அடிமைத் திறம் பூண்ட நாவலர் பாட்டு இயற்றும் ஆற்றல் இருந்தும் திருமுறைகளே போதுமானவை என்பதால் அந்த ஆற்றலைப் பயன்படுத்தவில்லை.

### நாவலர் வாசகம்:

1. இன்ன காலத்தில் இச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால் நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபட வேண்டும்.

2. பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையானால் பாவம் செய்பவர்களும் இலர், பாவம் செய்வோரினும் அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்.

3. உண்ணும் வகையறிந்து உண்ணுதலும், உண்டபின் நூறடி உலாவுதலும் பகலிலே நித்திரை செய்யாமையும். வாரந்தோறும் எண்ணெயிட்டுத் தலை முழுகுதலும் உளவாயில் உடம்பிலே நோய் உண்டாகாது.

4. எத்துணைக்காலம் திருப்பித் திருப்பிப் படிப்பினும் கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாது தித்தித்தமுதாறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்குக் கந்தபுராணம்

5. நித்திய பூசைக்கு முதற் பொருள் சேருமுன் கோயில் கட்டாதீர்கள். நித்திய பூசைக்குப் பொருளில்லாத கோயில்களிலே திருவிழா தொடங்காது நித்தியபூசையைக் கிரமமாக நடத்துவியுங்கள்.

## வீரமாமுனிவர் விழா

(புச்சிலைப்பள்ளி)

யாழ்ப்பாண மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் வடமராட்சிக்கிளை, தமிழகராதியின் தந்தை வீரமாமுனிவரின் மூன்றாவது நூற்றாண்டு விழாவினை சிறப்பாகக் கொண்டாடுகிறது.

இவ்விழா நாளை 30ம் திகதி கலட்டி றோமன் கத்தோலிக்க கலவன் வித்தியாலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். விழாவிற்கு திரு. தோமஸ் ஈப்பன் தலைமை தாங்குவார்.

பிரதமவிருந்தினராக பருத்தித்துறை நீதிபதி திரு. கே. எஸ். மகேசனும், சிறப்புவிருந்தினராக அருட்திரு யே. நீக்கிலாஸ் அடிகளாரும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். விழாவின் இறுதியில் பாடசாலை மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.


# ரெபெக்கா லீ பாப்பாப் போட்டி


அன்புப் பெற்றோர் அனைவருக்கும் ஓர் அழைப்பு!

ரூ.50,000/-க்கும்


அதிக தொகையை உத்தரவாத சேமிப்பாக

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்டில்

பெறுங்கள்!



உங்கள் குழந்தைக்கே அதிர்ஷ்டம் அடிக்கலாம்!




மிகக் கவர்ச்சித் தோற்றமுள்ள குழந்தைகளை, (ஒரு குழந்தை மருத்துவ நிபுணர் உட்பட) பிரபல பிரமுகர்கள் கொண்ட நடுவர் சபை ஒன்றே தேர்ந்தெடுக்கும். நடுவர் சபைத் தீர்ப்பே முடிவானது. வெற்றி பெறும் குழந்தைகளுக்கு போட்டி முடிந்தவுடன் வழங்கப்படும் மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் முதலீட்டுப் பத்திரங்களை, 2 வருடங்களின் பின் காசாக்கலாம். இதற்கான வட்டி வழங்கப்படும். மாதாந்தம் எடுத்தால் 23% வட்டி. 2 வருடங்கள் எடுக்காமல் விட்டால் இறுதியில் 25% வட்டி. (வட்டி வளர விட்டால், முதலீட்டுப் பத்திரத்தின் பரிசுப் பணம் பெறுமதி 150% ஆக உயரும்!) புகைப்படங்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டா.

மகாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், தொம்சன் அசோசியேட்ஸ் (சிலோன்) லிமிட்டெட் ஆகிய நிறுவன ஊழியர்களின் குழந்தைகள் இப் போட்டியிற் கலந்து கொள்ள முடியாது.

1-ம் பரிசு-ரூ. 20,000/- க்கு முதலீட்டுப் பத்திரம்.
2-ம் பரிசு-ரூ. 10,000/- க்கு முதலீட்டுப் பத்திரம்.
3-ம் பரிசு-ரூ. 5,000/- க்கு முதலீட்டுப் பத்திரம்.
15 ஆறுதற் பரிசுகள் – ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000/- க்கு முதலீட்டுப் பத்திரங்கள்.
முதலீட்டை எடுக்காமல் 2 வருடம் விட்டால் 25% வட்டி-அல்லது மாதாந்தம்-23% வட்டி.

6 மாதத்துக்கும் 2 வருடத்துக்கும் இடைப்பட்ட வயதுள்ள குழந்தைகள் பெருந் தொகைப் பரிசு பெறலாம். உங்கள் குழந்தையின் அஞ்சலட்டை அளவான புகைப்படத்தில், பின்புறம் குழந்தையின் பெயரை எழுதி, முறையாக நிரப்பிய விண்ணப்பத் தாளுடன் அனுப்புங்கள். ரெபெக்கா லீ பேபி பவுடர் கொள்கலத்தில் உள்ள குழந்தைப்படங்கள் இரண்டையும் இணைத்து அனுப்ப வேண்டும். எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றையும் தனித் தனிக் கடித உறையில் அனுப்பவேண்டும். ஒரு குழந்தை ஒரு பரிசு மட்டுமே பெறலாம். வெற்றிபெறும் குழந்தைகளின் பெயர்களில் மகாராஜா இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட் வழங்கும் முதலீட்டுப் பத்திரங்களாகப் பரிசுகள் தரப்படும். உங்கள் விண்ணப்பத்தை:-

''ரெபெக்கா லீ பாப்பாப் போட்டி''
த. பெ. எண். 38, கொழும்பு
என்ற விலாசத்துக்கு, 1980 டிசம்பர் 1ந் தேதியன்றோ அதற்கு முன்போ கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.




ரெபெக்கா லீ
இவ் வருடப் பாப்பாப் போட்டி

பெற்றோர்/பாதுகாவலர் பெயர்

விலாசம்

குழந்தையின் பெயர்

பிறந்த தேதி

பெற்றோர்/பாதுகாவலர் ஒப்பம்

ரெபெக்கா லீ பேபி பவுடர் கொள்கலத்தில் வெட்டி எடுத்த இரண்டு குழந்தைப் படங்கள் இணைத்துள்ளோம்.

TAL-484

உங்கள் குழந்தைக்கு அன்னைப் பராமரிப்பை அளிப்பது ரெபெக்காலீ

# தேசியமயம் சாபக்கேடா வரப்பிரசாதமா?

## பாராளுமன்றத்தில் இராஜலிங்கம் எம். பி.

(கொழும்பு)

''தேசிய மயமாக்கப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபை, ஜனதா தோட்ட அபிவிருத்திச்சபை உட்படப் பல சபைகள், கூட்டுத்தாபனங்கள் நஷ்டத்திலேயே இயங்குகின்றன. எனவே 'தேசிய மயம்' எமக்கு வரப்பிரசாதமா அன்றி சாபக்கேடா என்பதை நாம் சிந்தித்துத் தெளிவாக்கிக் கொள்ளவேண்டும்''.

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் நேற்று முன்தினம்பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

பெருந்தோட்டத் தொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

''இப்போது தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது றப்பர் உற்பத்தியின் நிலப்பரப்புக்குறைக்கப்பட்டுள்ளது. இதனால் தேயிலை, றப்பர் வர்த்தகம் பாதிக்கப்பட்டு 'இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் அபாயநிலை உள்ளது.

'றப்பரினால் இப்போது டயர் மட்டுமே தயாரிக்கப்படுகிறது. ஏனைய நாடுகள்போன்று இலங்கையிலும் றப்பர்மூலம் பல பொருட்களைத் தயாரிக்க வேண்டும்''. (மா - இ)

## தொழிற்சங்கவாதி தேவராசா

தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கத்தின் தலைவரும் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் பரிசாரகராகக் கடமையாற்றி வருபவருமான திரு. பொ. தேவராசா தமது 30 வருட சேவையின் பின்னர் பதவியிலிருந்து டிசம்பர் மாதம் 14ம் திகதி ஓய்வு பெறுகின்றார்.

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் தலைவராக கடந்த 1972ம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்டு தொடர்ந்து எட்டு ஆண்டுகளாகத் தலைவராக இருந்து அதன் இன்றைய வளர்ச்சிக்கு திரு. தேவராசா பெரும் தொண்டாற்றியுள்ளார். அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளையின் தலைவராக தொடர்ந்து 12 ஆண்டுகளும் அதன் செயலாளராக தொடர்ந்து ஐந்து ஆண்டுகாலமும் பணியாற்றிய திரு. தேவராசா தமக்கு கிடைக்கவிருந்த ஆஸ்பத்திரி ஓவசியர் போன்ற பல உயர் பதவிகளையும் ஏற்க முன்வராது தமது தொழிற்சங்கப் பணிகளையே பெரிதாக மதித்து சேவையாற்றி வந்தார் என்பதை சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் பலரும் அறிவார்கள். தமிழ்பேசும் சுகாதார சேவை ஊழியர்களுக்கு விதிக்கப்பட்ட 'சிங்கள மொழித்தேர்ச்சி' நிபந்தனையை நீக்கவேண்டும் என்று தொழிற்சங்க ரீதியாக குரல் எழுப்பி அதற்காக அமரர் ஜி. ஜி பொன்னம்பலம் திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் மூலமாக பலதடவைகள் அரசாங்கத்துடனும் இலாகாத் தலைவர்களுடனும் பேச்சு வார்த்தை நடாத்தி அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய பண்புகளை இலட்சியமாகக் கொண்டு சேவையாற்றிய திரு தேவராசா வைத்தியசாலை ஊழியர்களினதும் மற்றும் நோயாளர்கள் பொது மக்கள் ஆகியோரினதும் ஏகோபித்த அன்பிற்கும் அபிமானத்திற்கும் உரியவராகத் திகழ்கின்றார்.

நா. மா. கந்தசாமி
செயலாளர்
டிஸ்ப் பென்சர்கள் சங்க
யாழ். கிளை.

## மருந்துக் கலவையாளர்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் வேலை வங்கிக்கு புறம்பாக சமயாசமய மருந்துக் கலவையாளர்களை விளம்பரம் மூலம் விண்ணப்பங்களைக் கோரி வேலையில் சேர்த்துக் கொள்வதற்கு கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகருக்கு அங்கிகாரம் வழங்கியுள்ளார்.

இதன்பிரகாரம் 6 நிரந்தர மருந்துக் கலவையாளர்களுக்கு ஒரு சமயாசமய மருந்துக் கலவையாளர் என்ற அடிப்படையில் இப்பதவிகளுக்கு விரைவில் விண்ணப்பங்கள் யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகத்தினால் கோரப்படவுள்ளன.

மற்றைய மாவட்டங்களில் நடைமுறைப்பட்டதைப் போல யாழ். மாவட்டத்திலும் சமயாசமய மருந்துக்கலவையாளர்களை நியமனஞ்செய்யுமாறு அரசாங்கமருந்துக்கலவையாளர் சங்க யாழ்.மாவட்டக் கிளை நீண்டகாலமாகக் கேட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

### கோண்டாவில்

## இராமகிருஷ்ண ம வி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை மேற்படிகல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தை பொட்டி பல்வேறுநிகழ்ச்சிகள்அன்றைய தினம் இடம் பெறவிருக்கின்றன. ஆரம்ப நிகழ்ச்சியான இயல்அரங்குக்குநல்லூர்எம்.பி சிவசிதம்பரம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். ரிசளிப்பு அரங்குக்கு வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு.க.சிவநாதனும், இசை பாங்குக்கு முன்னாள்கல்வி அதிகாரிதிரு.பி.அ.சி. நல்லையாவும் சஞ்சிகை வெளியீட்டரங்குக்கு பேராசிரியர் க.கைலாசபதியும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஈ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழரின் இன்றைய நிலைபற்றியகருத்தரங்கொன்று நாளை பாலை நீர்வேலிகாமாட்சி அம்பாள் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் வைத்தியக்கலாநிதி எஸ்.ஏ.தர்மலிங்கம், ஈழவேந்தன், கோவை மகேசன், இறைகுமாரன், பொன். பூலோகசிங்கம் ஆகியோர்ஈழத் தமிழரின் இன்றைய நிலைபற்றி உரையாற்றுவர்.

## சுயதொழில் வேலைவாய்ப்புக் கருத்தரங்கு

(பலாலி)

சுயதொழில் வேலைவாய்ப்பு சம்பந்தமாகத் தொகுதி மட்டத்தில் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது

யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் மன்றம் ஒழுங்கு செய்துள்ள இக்கருத்தரங்கு அடுத்த மாத முதல் வாரத்தில் நடைபெறவிருக்கிறது.

சாவகச்சேரி, பருத்தித்துறை, கிளிநொச்சித் தொகுதிகளில் இடம்பெறும் இச்கருத்தரங்குகளில் அவ்வத் தொகுதி இளைஞர், யுவதிகளும், கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்களின் அங்கத்தவர்களும் கலந்து கொள்வார்கள், (அ

## யாருடையது?

மின்சார நிலைய வீதியில் கிடந்தெடுக்கப்பட்ட ஜி.சி.ஈ. பெறுபேற்று அட்டவணை, பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் புகைப்படப் பிரதிகள் நாயன்மார்கட்டு என். சிவானந்தன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## அரசு, கூட்டுத்தாபன ஊழியர்கள் சொந்த இடங்களுக்கு இடமாற்றம்

### விபரம் கோரப்படுகிறது

(பச்சிலைப்பள்ளி)

பஸ், புகையிரத கட்டண அதிகரிப்பை அடுத்து, அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களைச் சொந்தஇடங்களுக்கு மாற்றும்முகமாக சகல அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களிடமிருந்தும் தனித்தனியே விபரங்கள் கோரப்பட்டுள்ளன

அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களின் வசிப்பிடத்திற்கும் வேலைசெய்யும் இடத்திற்குமுள்ள தூரம், அத்தூரத்தை பஸ் மூலமா அல்லது புகையிரதம் மூலமா பிரயாணம் செய்கிறார்கள், அவரின் ஒருநாந்த, மாதாந்த வேதனம் என்பன போன்ற விடயங்கள் அவ்விபரக் கொத்தில் கேட்கப்பட்டுள்ளன

இவ்விபரக் கொத்தினை சகல அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களும் நிரப்பி தமது அலுவலகத் தலைவருக்கூடாக அனுப்பிவைக்கவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர்,

## மந்திகை ஆஸ்பத்திரி நடவடிக்கைக்குபாராட்டு

(பச்சிலைப்பள்ளி)


மந்திகை அரசினர் வைத்தியசாலை தரம் குறைக்கப்பட இருப்பதாகப் பரப்பப்பட்ட செய்தி சம்பந்தமாக சுகாதார அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு உண்மை நிலையை மக்களுக்கு விளக்கும் வகையில் பத்திரிகையில் அறிக்கை வெளியிட்டதற்காக எதிர்க்கட்சித்தலைவர்திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு பருத்தித்துறைத் தொகுதித் தமிழர் விடுதலைக்கூட்டணி மாவட்டக் கிளை நன்றி தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பருத்தித்துறை எம் பி திரு. க. துரைரத்தினம் தலைமையில் செம்பியன்பற்றில் மாவட்டக் கிளையின் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

## உப - தபாலதிபர் ஆய்வு வகுப்பு

(பச்சிலைப்பள்ளி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் உப-தபாலதிபர்களுக்கு தபால் தந்திஅமைச்சின் செயலாளர் திரு. ஏ. ஆர். எம் ஜெயவர்த்தன தலைமையில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் பகுதி அத்தியட்சகர் திரு என் பாலசிங்கம், தபால் அத்தியட்சகர் திரு நடராசா, பிராந்திய கணக்காளர், மத்திய தபால் எக்சேஞ் அத்தியட்சகர் திரு. மைக்கல் வியனசே, திரு.கே. பி பெரேரா ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வுரைகள் வழங்கினர்.


50 மி. லீட்டர் ரூபா 13-00
200 மி. லீட்டர் ரூபா 42-50
100 மி. லீட்டர் ரூபா 23-00
450 மி. லீட்டர் ரூபா 87-50
4.5 லீட்டர் ரூபா 825-00

# "பஸ்ஸிலிருந்த கமலத்தை இறங்கும்படி முதலாம் எதிரி கூறினர்"

## கமலம் கொலைவழக்கில் ஆசிரியை சாட்சியம்

### 2-ம் எதிரியின் மனைவி சாட்சியமளிக்க அனுமதிமறுப்பு

(நமது புலோலி நிருபர்)

"சம்பவதினமிரவு கமலத்தைத் தேடி உதயமாலினியிடம் சென்று விசாரித்தபோது; கமலம்பஸ்ஸில் இருந்தபோது 1ம் எதிரி வந்து கமலத்தை இறங்கச் சொன்னதால் கமலம் பஸ்ஸால் இறங்கியதாகச் சிவஞானவதி தனக்குச் சொன்னதாகவும், கமலம் தாங்கள் வந்த பஸ்ஸில் வரவில்லையென்றும் உதயமாலினி சொன்னர்"

இவ்வாறு பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன்கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளித்த பருத்தித்துறை பீச்ரோட்டைச் சேர்ந்தஆசிரியையான திருமதி இரத்தினம் பத்மநாதன் குறிப்பிட்டார்.

1980ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ம்திகதி இரவுக்கும் 22ம் திகதி காலைக்கு மிடைப்பட்ட காலப்பகுதியில் பொலிகண்டியைச் சேர்ந்த டியூட்டரி மாணவியான கமலம் இராமச்சந்திரனை (வயது 15) வராத்துப்பளை ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அண்மையில் கொலைசெய்ததாகவும் கொலையுண்ட மாணவி கமலம்அணிந்திருந்த 3600 ரூபா பெறுமதியான தங்கநகைகளை அபகரித்தார்களெனவும்குற்றஞ்சாட்டி பருத்தித்துறை சின்னத்தோட்டத்தைச் சேர்ந்த கந்தசாமி இராஜ்குமார் (ராஜன்) அல்லது வீரப்பன் அவரது நண்பரான பொன்சியம் பெர்ணண்டோ (ரூபி) அல்லது ருெபின்சன் ஆகியோருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே. எஸ். மகேசன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும் 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் ஆஜராகியிருந்தனர். நீதிமன்றத்திற்கு உதவியாகச் சட்டத்தரணி எம். சோமசுந்தரமும். பொலிசார் சார்பில் பொலிசாருக்கு உதவியாக சட்டத்தரணிகளான எஸ். சண்முகசுந்தரம், எஸ். சிவஞானசுந்தரம் (காண்டீபன்) செல்விகளான உமா துரைசிங்கம், சந்திரா சச்சிதானந்தம், எஸ். சி. பிலிப் ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த ஆசிரியையான திருமதி இரத்தினம் பத்மநாதன் குறிப்பிட்டதாவது:

#### கமலம் பற்றிக் கூறினர்கள்

"1980 பெப்ரவரி 21-ந்திகதி இரவு திருமதி இராமச்சந்திரனும் இன்னும் இருவரும், திருமதி இராமச்சந்திரனின் தாயாரும், பிள்ளைகளும் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். வந்து டியூட்டறிக்குப்போன கமலம் இன்னும் வீட்டிற்கு வரவில்லை என்று கூறினர்கள். எனவே நாங்களும் காரில் ஏறி விசாரிப்பதற்காக டியூட்டறி ஆசிரியரான திரு. ராஜரட்ணத்தின் வீட்டிற்குச் சென்ருேம்.

"அங்கு சென்று விசாரித்த போது ராஜரட்ணம் ஆசிரியர், கமலம் அன்று ரியூசனுக்கு வந்ததைக் கண்டதாகவும், பருத்தித்துறை சிவன்கோவிலடியில் இருக்கும் ஜெகமலர் என்ற பிள்ளையைக்கேட்டால் விபரம் தெரியும் என்றும் சொன்னர். பின்னர் ராஜரட்ணம் ஆசிரியரும் காரில் வந்தார். சிவன் கோவிலடி ஜெகமலர் வீட்டிற்குச் சென்று எனது கணவரான பத்மநாதனும், ராஜரட்ணம் ஆசிரியரும் விசாரித்த பின்னர் கமலம் 1-ம் எதிரியான ராஜனுடன் கதைத்துக் கொண்டிருந்ததாகவும், பஸ் சென்றபோனது பற்றிய விபரங்களை உதயமாலினியைக் கேட்டால் தெரியும் என்றும் ஜெகமலர் சொன்னதாக வந்து சொன்னர்கள்.

#### 1-ம் எதிரி இறங்கச் சொன்னர்

"பின்னர் நாங்கள் உதயமாலினி வீட்டிற்குப் போனேம். உதயமாலினி, கமலம் பஸ்ஸில் இருந்தபோது 1-ம் எதிரி வந்து இறங்கச் சொன்னபடியால் அவ இறங்கிச் சென்றதாக சிவஞானவதி தனக்குச் சொன்னதாகச் சொன்னர். அத்துடன் தாங்கள் வந்த பஸ்ஸில் கமலம் வரவில்லை என்றும் சொன்னர்.

"இதனையடுத்து 1-ம் எதிரியின் வீட்டைத்தேடி வல்வெட்டித்துறையில் உள்ள 1ம் எதிரியின் தாயாரின் வீட்டிற்குச் சென்ருேம், அங்கு நாங்கள் விசாரித்தபோது 1ம் எதிரியின் தாயார் பருத்தித்துறையில் உள்ள பற்றிக் என்பவரின் வீட்டில் அவரின் கீழ் தனது மகன் ராஜன் (1-ம் எதிரி வேலை செய்வதாகக் கூறினர்.

#### 1ம் எதிரியைக் காட்டினர்

"நாங்கள் திரும்பி பற்றிக் (2ம் எதிரியின்) கின் வீட்டிற்கு வந்து கேட்டபோது 1ம் எதிரி சில நாட்கள் தன்னிடம் தொழிலுக்கு வரவில்லை என்றும் அவர் தனக்கு ஆயிரம் ரூபா தருமதி என்றும் சொன்னர். பின்பு பற்றிக் எங்களைக் கூட்டிப்போய் 1ம் எதிரியின் வீட்டைக் காட்டினர்.

"நானும் திருமதி இராமச்சந்திரனும் எதிரியின் வீட்டிற்குப் போகும் ரோட்டில் நிற்க எனது கணவர் பத்மநாதனும் அவ்விடத்தில் நின்ற இரண்டு பேரும் 1-ம் எதிரியிடம் சென்று அவரைக்கூட்டிவந்தார்கள். அப்போது திருமதி இராமச்சந்திரன் "எங்கேயடா ராஜன் கமலம்?" என்று கேட்டார்.

#### "எங்கேயடா என்பிள்ளை"

"அதற்கு 1-ம் எதிரிதாம் கமலத்தை 763-ம் இலக்க பஸ்ஸில் ஏற்றி விட்டதாகவும் அவ்வீட்டிக்கு வந்திருக்க வேண்டுமென்றும் கூறினர். திரும்பவும் திருமதி இராமச்சந்திரன் 1-ம் எதிரியிடம் கமலம் அந்த பஸ்ஸில் வரவில்லை எங்கேயடா எனது பிள்ளை என்று சொல் என்று கேட்டார்.

"பின்பு 1-ம் எதிரியுடன் இன்னும் அங்கு நின்ற சிலரும் எங்கள் வீட்டிற்குச் சென்ருேம். நாங்கள் முன்பு பற்றிக் வீட்டிற்குப் போனபோது அங்கு 2-ம் எதிரியின் தாயிடம் ரூபி (2-ம் எதிரி)

(8-ம் பக்கம்பார்க்க)





நம்பகமானவை ரவி
பெயின்ட்/வானிஸ் பிறஷ்கள்



- நீடித்த பாவனையுடையவை
- நீண்ட தூரிகை மயிர்
- கையாள்வது சுலபம்
- குறைந்த நேரத்தில் கூடுதலான இடப்பரப்புக்கு வர்ணம் பூசுகின்றன

உற்பத்தியாளர்கள்.
ரவி இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்.

ஹேலிஸ் லிமிட்டெட். தாபனத்தின் துணை நிறுவனம்

கிடைக்குமிடங்கள்: க. பொ. கூ. விற்பனை நிலையங்கள், இரும்பு வியாபாரிகள், முன்னணி சில்லறை வியாபாரிகள் மற்றும் ஹேலிஸ் சில்லறை விற்பனை நிலையம், 40, கெயிசர் வீதி, புறக்கோட்டை, தொலைபேசி: 20052.

ரவி பெயின்ட்/வானிஸ் பிறஷ்கள்

| படிவமைப்பு இல | அளவு | பிறஷ் ஒன்றுக்கு சிபாரிசு செய்த விலை |
|---|---|---|
| 001-1 | 1/2" | 5/75 |
| 001-2 | 3/4" | 6/75 |
| 001-3 | 1" | 8/70 |
| 001-4 | 1 1/2" | 11/70 |
| 001-5 | 2" | 18/40 |
| 001-6 | 2 1/2" | 24/00 |
| 001-7 | 3" | 28/70 |
| 001-8 | 4" | 39/00 |
| 001-9 | 5" | 46/70 |
| 001-10 | 6" | 57/25 |

Mel Ads

# பஸ்ஸிலிருந்த கமலத்தை இறங்கும்படி....

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

எங்கே என்று கேட்டேன். அதற்கு 2-ம் எதிரியின் தாயார் ஒரு படத்திற்குப் போய் வந்து படுத்திருப்பதாகச் சொன்னார்.

### பிள்ளையைக் கொண்டுவா

எனக்கு முன்னரேயே பற்றுக் குடும்பத்தையும் ரூபியையும் தெரிந்தபடியினாலேயே நான் ரூபி எங்கே என்று கேட்டேன். நான் 2-ம் எதிரியின் மேல் அப்போது சந்தேகங் கொண்டு அவரைக் கேட்கவில்லை. தற்செயலகத்தான் அவரைப்பற்றிக் கேட்டேன்.

''எங்கள் வீட்டில் திருமதி இராமச்சந்திரனின் தாயார் ராஜனிடம் பிள்ளை எங்கேயடா என்று கேட்டார். அதுடன் நீதான் ஏதோ செய்துவிட்டாய் பிள்ளையைக் கொண்டுவா 'என்று சொன்னார். அப்போது 1-ம் எதிரி அதட்டிக் கொண்டுநின்றார்.

### யாழ்ப்பாணம் சென்றோம்

''பின்பு எனது கணவரும், அங்கிருந்த இருவரும் 1ம் எதிரியை கடற்கரைப் பக்கம் கூட்டிச் சென்று கதைத்துவிட்டு கமலம் வல்வெட்டித்துறை இராசேந்திரத்துடன் யாழ். பரணி ஹோட்டலுக்குப்போயிருப்பதாகவும் அங்கு போய்க் கமலத்தைக் கூட்டிவரலாமென்று 1 ம் எதிரி சொன்னதாகவும் கூறி, காரில் 1ம் எதிரியுடன் யாழ்ப்பாணத்துக்குச் சென்றார்கள். நானும் திருமதி இராமச்சந்திரனும், தாயாரும், இரு பிள்ளைகளும் எங்கள் வீட்டிலேயே இருந்தோம்.

அவர்கள் யாழ்ப்பாணம் போகமுன்னர் பற்றிக்கும், அவரது மகனை 2-ம் எதிரியும் இன்னும் சிலரும் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார்கள். யாழ்ப்பாணம் போனவர்கள் அதிகாலை மூன்றரை, நாலு மணிபோல் திரும்பி வந்தார்கள். ஆனல் கமலம் வரவில்லை,

''அப்போது திருமதி இராமச்சந்திரனின் தாயார் ''இவனை (1-ம் எதிரியை) இனிமேல் விட்டுவைக்கக் கூடாது பொலிசில் பாரங் கொடுக்க வேண்டுமென்று கூறினர்.

### 1ம் எதிரி மறைந்துபோனர்

''அப்படிக்கூறிச் சற்றுநேரத்தின்பின் 1ம் எதிரி மறைந்துவிட்டார். 1ம் எதிரியுடன் 2ம் எதிரி கதைத்ததை நான் காணவில்லை. 2ம் எதிரி எங்களுடன் கதைத்துக் கொண்டிருந்த போது அவர் எதுவித பதட்டமோ, மனக்கிலேசமோ கொண்டவராகக் காணப்படவில்லை. அதன்பின்னர் திருமதி இராமச்சந்திரன் தான் யாழ்ப்பாணம் போய்க் கமலத்தைத்தேடிப் பார்க்க வேண்டுமென்று, கூறிவிட்டுச் சென்றார்கள்.

''அன்று (22-2-80) காலை நான்வழமை போலப் பாடசாலைக்குச் சென்றிருந்தேன். காலை 10 மணிபோல் திருமதி இராமச்சந்திரன் கமலத்தின் பிரேதம் ஆனைவிழுந்தானில் கிடப்பதாகச் சொல்லி அனுப்பியிருந்தார்.

### கமலம் இறந்த செய்தி

நீதவான்: 22-2-80 அதிகாலை மூன்றரை நான்கு மணிபோல போல 1ம் எதிரி போனபின் 2ம் எதிரி அங்கு நின்றாரா? 1ம் எதிரிபோனபின் 2ம்எதிரியும் போய்விட்டார். அவரைத்தொடர்ந்து தகப்பனும் போய்விட்டார்.

நீதவான்: அதன்பின் 2-ம் எதிரியை எங்கே கண்டீர்!- நீதிமன்றத்தில்.

நீதவான்: 22-2-80 காலை நீங்கள் பாடசாலைக்குப்போகமுன் 2ம் எதிரியோ அவரது தகப்பனரோ கமலத்தின் பிரேதம் ஆனைவிழுந்தானில் கிடப்பதாக உங்களுக்குச் சொன்னார்களா?- இல்லை. கமலம் இறந்ததுபற்றிப் பாடசாலைக்குப் போனபின்புதான் அறிந்தேன்.'

2ம் எதிரியின் மனைவியான மேரி திரேசா சாட்சியமளிப்பதற்கு அழைக்கப்பட்டபோது 1ம் எதிரி சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி ஆர்.

(9ம் பக்கம் பார்க்க)

## மரநடுகை இயக்கம்

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்ட அமைச்சின், மர நடுகைத் திட்டத்தின் கீழ் உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள கப்புதூக் கிராமத்தில் மர நடுகை இயக்கம்ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இம் மர நடுகை இயக்கத்தை, கப்புதூ கிராம சேவை அலுவலர் திரு. சு. விஜயகுமார் ஆரம்பித்து வைத்துள்ளார்.



## சோதிட–

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லை ஞானசபபந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இவ் ஆய்வரங்கிற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளரும், இலங்கைக் கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியத்தின் தலைவருமான திரு. நா. சுப்பிரமணிய ஐயர் தலைமை தாங்குவார்.

ஆய்வரங்கில் வதிரியூர் மு. கனகரத்தினத்தின் "லக்கின பாவம்" என்ற ஆய்வுக் கட்டுரையும், பண்டிட் கே. என். நவரத்தினம் எழுதிய "முதலாம் எண்ணின் யோகமும் அதன் தாக்கமும்" என்ற ஆய்வுக் கட்டுரையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன. (ஈ)

## பஸ்லிலிருந்து...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பி. சபாரத்தினம் மேரி திரேசா 1ம் எதிரியின் பதிவுத் திருமணம் செய்யப்பட்ட பனைவி என்றும் அவர் சாட்சியமளிப்பது அவசியம் என்றும் கூறியதைத் தொடர்ந்து நீதவான் மேரி திரேசாவைச் சாட்சியமளிக்க அனுமதிக்கவில்லை.

காங்கேசன்துறை சப் இன்ஸ்பெக்டர் திரு. இரத்தினசபாபதி சாட்சியமளிக்கையில் "நான் இங்கு சமர்ப்பிக்கும் 1980ம் ஆண்டு வீலா யூனியன் டயறியை 26-2-80 அன்று இறந்த சமலத்தின் தாயாரிடமிருந்து பெற்றுக்கொண்டேன். அவர் அந்த டயறி இறந்த கமலத்தினுடையதென அடையாளம் காட்டினார்" என்றார்.

மேல்விசாரணை இன்று 28ம் திகதி பிற்பகல் 1-30 மணிக்கு ஆரம்பமாகும்.

# சாம்பியன் போட்டிகள் இன்று ஆரம்பம்

(நமது விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் சாம்பியன் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. அத்துடன் 3-ம் இடத்தைப் பெறும் சோஷ்டி தெரிவுப் போட்டியும் நடைபெறும்.

### 1934 முதல்....

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் 1934-ம் ஆண்டு தொடக்கம் இவ்வுதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடாத்தி வருகிறது. எனினும் 1977-ம் ஆண்டு மட்டும் நாட்டில் நடைபெற்ற இனக்கலவர நெருக்கடியினால் இச்சுற்றுப் போட்டியை நடாத்தவில்லை. இவ்வருட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 2-ம் பிரிவிலும், 3-ம் பிரிவிலும் புதிதாகச் சில பாடசாலைகள் சேர்ந்து கொண்டமையால் அவற்றிற்கென தனியாக அவ்வப் பிரிவுகளில் சுற்றுப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

1-ம் பிரிவுப் போட்டியில் 18 பாடசாலைகளும், 2-ம் பிரிவுப் போட்டியில் 18 பாடசாலைகளும், 2-ம் பிரிவுப் புதிதாக 'பீ' பிரிவில் 5 பாடசாலைகளும் 3ம் பிரிவில் 16 பாடசாலைகளும் 3ம் பிரிவில் புதிதாக 'பீ' பிரிவில் பதினொரு பாடசாலைகளும் பங்குபற்றியிருந்தன. இவற்றிற்கிடையேயான 1ம் பிரிவு முதல் சுற்று ஆட்டங்கள் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் நடைபெற்றன. 2ம், 3ம் பிரிவின் முதல் சுற்று ஆட்டங்கள் அவ்வப் பாடசாலைகளில் நடைபெற்றன. கால் இறுதி ஆட்டங்களுக்கு ஒவ்வொரு பிரிவுகளில் இருந்தும் தலா 4 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு போட்டிகள் நடைபெற்றன. 3ம் பிரிவின் 'பீ' பிரிவில் மட்டும் 2 பாடசாலைகள் தெரிவாகியிருந்தன. இவற்றுக்கான போட்டிகள் மானிப்பாய் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரிகளில் நடைபெற்றன.

அரைஇறுதி ஆட்டங்களுக்கு ஒவ்வொரு பிரிவுகளில் இருந்தும் தலா 4 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகள் அனைத்தும் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்திலேயே நடைபெற்றது.

### 3-ம் பிரிவு 'பீ' சாம்பியன் போட்டி

3-ம் பிரிவின் 'பீ' பிரிவு சாம்பியன் போட்டி இன்று நடைபெறுகிறது. 3-ம் இடத்திற்கான தெரிவுப் போட்டியும் இன்று நடைபெறும். சாம்பியன்போட்டியில் அராலி இந்துக்கல்லூரியும், யாழ்ப்பாணம் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயமும் போட்டியிடும். இப்போட்டியில் 1-ம், 2-ம் இடங்கள் தெரிவுசெய்யப்படும். இளவாலை பெய்கண்டான் மகாவித்தியாலயமும், காரைநகர் இந்துக்கல்லூரியும் போட்டியிட்டு, இதில் வெற்றி பெறும் பாடசாலை 3-ம் இடத்தைப்பெறும்.

2-ம் பிரிவின் 'பீ' பிரிவு சாம்பியன் தெரிவு ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை சாம்பியனாகவும், அராலி இந்துக் கல்லூரி 2-ம் இடத்தையும் பெற்றுள்ளது.

### போட்டி முடிவுகள்

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக்கும் மிடையே நடைபெற்ற 3-ம் பிரிவு அரைஇறுதிப் போட்டியில் இந்துக் கல்லூரி 4-1 கோல்களால் வெற்றிபெற்றுள்ளது. ஆரம்பத்தில் போட்டி குறிப்பிட்ட நேரத்தில் சமமாக முடிந்ததனால் பனல்டி உதைகள் வழங்கப்பட்டே வெற்றி நிச்சயமாக்கப்பட்டது. மத்தியஸ்தராக திரு. கே. தனபாலசிங்கம் கடமையாற்றினார்.

1-ம்பிரிவுப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரியை 3-2 கோல்களால் தோற்கடித்தது. மேலதிகமாகக் கொடுக்கப்பட்ட 10 நிமிட அவகாசத்திலேயே யூனியன் கல்லூரி வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது. மத்தியஸ்தராக திரு. என். புலேந்திரன் கடமையாற்றினார்.

## இன்றும் நாளையும்

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டி 2-ம் பிரிவு, 3ம் பிரிவு இறுதி ஆட்டம் இன்றும் நாளையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

2ம் பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி- யாழ். மத்திய கல்லூரி போட்டியில் வெற்றி பெறும் கல்லூரி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியுடன் மோதும். 3ம் பிரிவுப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியுடன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மோதும்.


RANEE (Jaffna) Daily 3 Shows at 10-30 a.m., 2-30, and 6-30 p.m.

Omar Sharif, Alec Guinness, Rod Steiger, Ralph Richardson in

DAVID LEAN'S FILM

"DR. ZHIVAGO"

(Winner of 6 Academy awards)

ராஜா (யாழ்ப்பாணம்) ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், சே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்

(தினசரி 4 காட்சிகள்)



சுப்பிரபாதம்

(ஈஸ்ட்மன் கலர்)

வெற்றி முழக்கமிடும் 9-வது வாரம்

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்

ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த

மீனவ நண்பன்

வெஸ்லி (மானிப்பாய்)

தினசரி 6-30, 9-30, சனி-ஞாயிறு 2-30

ரவிச்சந்திரன்- கல்பனா

மதராஸ் டூ பாண்டிச்சேரி

நாகம்ஸ் (சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30 சனி-ஞாயிறு 2-45

ஞானக்குழந்தை

ஹரன் யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

சிவகுமார்-சுஜாதா

அன்னக்கிளி

(புதிய பிரதி)

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் ஜனத்திரள் நிறைந்த 3வது வாரம்

தினசரி 10-30 2-30, 6-30 & 9-45

மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி வலம்வருவதற்கு ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

மக்கள் கலைஞர் ஜெய்சங்கர் ★ சீமா ★ புன்னகை அரசி கே. ஆர். விஜயா

நாட்டியப் பேரொளி பத்மினி ★ வி. கே. ராமசாமி ★ மனோரமா

விதுபாலா ★ ரீனா ★ அமெரிக்க நடிகர்கள் ஜோ ஆல்பரட் ★ மார்ஷல் மற்றும் பலர் ஜொலிக்கும்

ஒரே வானம் ஒரே பூமி

(வண்ணக்கலர்)

இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வண்ணத் திரையோவியம். ஆங்கிலப் படங்களை மிஞ்சும்வகையில் அமைந்த விறுவிறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.

சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல் எந்தப் படத்திலும் காணக்கிடைக்காத பயங்கரச் சண்டைகள், மோட்டார் சைக்கிள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.

வெலிங்டன் (யாழ்நகர்)

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - சரோஜாதேவி

பாலும் பழமும்

லிடோ (யாழ்நகர்)

தினசரி 10-30, 2-15, 4 45, 7-15 & 9-30

Black Sunday

வின்ஸர் (யாழ்நகர்)

தினசரி 10-30, 2-30, 6-15, & 9-30

முத்துராமன் - ஜெயலலிதா-எம்.ஆர். ஆர். வாசு நடித்த

சூரிய காந்தி

SANTHI Jaffna - 10-30, 2-15, 4-45, 7-15 & 9-45

TATUM O'NEAL. CHRISTOPHER PLUMMER

International Velvet

A Family Entertainment With suspense 'color'

1-12-80 "DIRTY DOZEN"

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

# மதுரை தமிழாராய்ச்சி மகாநாட்டை ஆரம்பித்து வைக்க நேரம் இல்லை

## எம். ஜி. ஆரிடம் இந்திரா நேரில் கவலை

புதுடில்லி, நவ. 28 மதுரையில் நடைபெற வுள்ள ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை ஆரம்பித்து வைக்க முடியாமலிருப்பது குறித்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி வருத்தம் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பிரதமர் திருமதி காந்தியைச் இன்று சந்தித்த போது இம் மாநாட்டை ஆரம்பித்து வைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

மகாநாட்டுக்கு ஏக்கனவே திட்டமிடப்பட்டுள்ள திகதியில் கலந்துகொண்டு அதனை ஆரம்பித்துவைக்க முடியாதிருப்பதாக திரு. இராமச்சந்திரனிடம் பிரதமர் தெரிவித்ததாக தெரியவருகிறது.

இம்மகாநாட்டில் கலந்துகொண்டு அதனை ஆரம்பித்து வைக்க முடியாமலிருப்பதற்கு வருத்தம் தெரிவித்த பிரதமர் மாநாடு சிறப்புற தமது வாழ்த்துக்களை தமிழக முதல்வரிடம் தெரிவித்ததாகவும்தெரிகிறது. (கு)

### சைக்கிள் திருட்டு வழக்கு:

# கோழியை சாட்சியாகக் கூறிய எதிரியின் தந்தை!

(மட்டுவில்)

''கோழி கூவியதும் கண்விழித்து விடுவோம் ஐயா. ஆனால் அது எத்தனை மணி என்று நேரம் குறித்துச் சொல்லத் தெரியாது ஐயா. சம்பவதினமும் கோழிக் கூவலுக்குக் கண்விழித்தோம். மகனின் மனைவி தேநீர் தயாரித்துக் கொடுத்தார். குடித்துவிட்டு மகன் எழுதுமட்டுவாள் சென்றார். நான் இணுவிலுக்குச் சென்றேன்.''

இவ்வாறு சைக்கிள் திருட்டுச் சம்பந்தமான வழக்கொன்றில் சாட்சியமளித்த எதிரியின் தந்தை வி. கந்தையா நீதிபதி முன்னிலையில் கூறினார்.

மந்துவிலைச் சேர்ந்த க. குணரத்தினம் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த ந. வைத்திலிங்கம் என்பவரின் சைக்கிளை 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ம் திகதி அதிகாலையில் திருடியதாக சாவகச்சேரிப் பொலிசாரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. ஸி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது எதிரி கூண்டிலிருந்த எதிரியை சாட்சிக் கூண்டில் ஏற்றி விசாரணை நடத்தப்பட்டது. எதிரி நிரபராதி என்று நிரூபிக்குமுகமாக எதிரிதரப்பு சட்டத்தரணி எதிரியின் தந்தை வி. கந்தையா என்பவரை சாட்சிக்கூண்டில் ஏற்றி விசாரணை செய்தார். இதைத் தொடர்ந்து, வாதிதரப்பு சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்டத்தரணி: ''தினமும் நீங்கள் எத்தனை மணிக்கு எழும்புவது வழக்கம்''?

சாட்சி: ''நேரம் தெரியாது ஐயா. கோழி கூவும் சத்தம் கேட்டதும் எழுந்துவிடுவோம்.

நீதிபதி: இரவில் கோழி பலதடவை கூவும் வழக்கமுண்டு. அப்படிக் கூவும்போதெல்லாம் எழுந்து விடுவீர்களா?

சாட்சி: கொடிகாமத்தில் ரயில் கூவெண்ணும் சத்தத்திற்கும் எழுந்துவிடுவோம்.

நீதிபதி: ரயிலும் சிலமணி நேரம் தாமதித்துவந்தால்.....

சாட்சி; பதில் இல்லை (கோட்டில் சிரிப்பு)

நீதிபதி விசாரணையை 1981 ஜனவரிவரை ஒத்திவைத்தார்.

# ஆசிரியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியுள்ளார். இதை நானும் வரவேற்கிறேன். ஆங்கிலக்கல்வி உண்மையிலேயே மிக அவசியம் தான். அதற்காக தாய்மொழியை நாம் எதிர்ப்பதாக எவரும் தவறுகப்புரிந்து கொள்ளக் கூடாது. தாய்மொழியில் கல்வி கற்பதினல் மாணவர்கள் தாம் கற்பதை இலகுவாக விளங்கிக் கொள்ளமுடியும் என்பதும் உண்மையே.

ஆரம்பவகுப்புக்களில் இப்போதெல்லாம் எஸ். எஸ். ஸி. சித்திஅடைந்தவர்களே கல்வி கற்பிக்கிறார்கள். ஆரம்பத்திலேயே பயிற்றப்பட்ட ஆசிரியர்களிடம் கல்வி கற்றாலேயே மாணவர்களின் எதிர்காலக் கல்விவளம் பெறும்.

அண்மையில் வடபகுதிருந்து 140 ஆசிரியர்கள் நைஜீரியா சென்றனர். அவர்களின் இடத்திற்கு எவரும் புதிதாக நியமிக்கப்படவில்லை.

## காங்கேசனில் 94 ஆசிரியர்கள் பற்றுக்குறை

எனது தொகுதியான காங்கேசன்துறையில் மட்டும் 94 ஆசிரியர்கள் பற்றுக்குறையாக உள்ளனர்.

1,500 ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்திற்கு உடனடியாகத் தேவை. யாழ். மாவட்டத்தில் தேவைக்குக் கூடுதலான ஆசிரியர்கள் சேவை யாற்றுகிறார்கள் என கல்வி அமைச்சு அதிகாரிகள் தவறுகப் புரிந்து வைத்திருக்கிறார்கள், உண்மை நிலையை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆங்கில மொழியில் திறமைச்சித்தியுடன் ஜீ. சி. ஈ. சாதாரண தரப்பரீட்சையில் சித்திபெற்று 8 ஆயிரம் ரூபா கொடுத்து அண்மையில் ஆசிரியர் பதவி பெற்றுக் கொண்ட ஒருவர் யானையின் ஆங்கில பதத்தை (Elephant) எழுத்துக் கூட்டத்தெரியாத நிலையில் இருந்தார். இவரைப் போன்ற ஆசிரியர்களினல் எவ்வாறு கல்விநிலை சீராகும்.

யாழ். மாவட்டத்தில் மட்டும் 158 கல்லூரிகளில் நிரந்தர அதிபர்கள் கிடையாது.

ஆசிரியர்களுக்கு 60 வயதுவரை சேவை நீடிப்பு வழங்கிவிட்டு அவர்களை நெடுந்தீவு போன்ற கஷ்டப் பிரதேசங்களுக்கு அனுப்புகிறீர்கள்! அந்தமான் தீவும் உங்கள் ஆட்சியில் இருந்தால் அங்கும் ஆசிரியர்களை அனுப்புவீர்கள். (ம-இ)

# சங்கீத பட்டதாரிகளுக்கு ஒரே சம்பளம் வழங்குக

## பாராளுமன்றத்தில் 'சிவா'

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு இங்கு சம்பளம் மிகவும் குறைவு எனவே தான் அவர்கள் வெளியே போகிறார்கள். எனவே ஆசிரியர்களுக்குப் போதிய சம்பளம் வழங்க அரசு முன்வரவேண்டும்.

இவ்வாறு நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது சங்கீத பூஷணம் பட்டம் பெற்ற ஆசிரியர்களை விட சங்கீத வித்துவான் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு இங்கு குறைந்த சம்பளமே வழங்கப்படுகிறது. சங்கீத பூஷணம் பட்டமே இங்கு உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. இதுகுறித்து நான இந்தியாவில் விசாரித்துப் பார்த்தேன். சங்கீத வித்துவான் பட்டமே உயர்ந்தது என்று அங்கு கூறினார்கள்.

எனவே கல்வி அமைச்சு இந்த சம்பள முரண்பாட்டை நீக்கி வித்துவான் பூஷணம் பட்ட தாரிகளுக்கும் ஒரே சம்பளம் வழங்கவேண்டும்.

6-ம், 7-ம் வகுப்பு 'தமிழ் மலர்' புத்தகத்தின் 72-ம் ஆண்டு பதிப்பில் சுவாமி ஞானப்பிரகாசர் பற்றிய கட்டுரை வெளியிடப்பட்டிருந்து. 74ம் ஆண்டுப் பதிப்பில் அது அப்புத்தகத்திலிருந்து நீக்கப்பட்டது. பெரும் கல்விமான் பற்றிய அக்கட்டுரையை மீண்டும் வெளிவரச்செய்யவேண்டும். (ம-இ)

# விதானையார் அப்பா



விதானையார் அப்பா தண்ணீரூற்று முள்ளியவளைப் பகுதி மக்கள் அவரை இப்படித்தான் அழைப்பார்கள்.

ஒன்று அவர் வகித்த அரச பதவியைக் குறித்த சொல்; மற்றது மக்கள் அவர் மேல் வைத்த அன்பை- மதிப்பைக் குறித்தது.

வாழையும் செந்நெல்லும் பலாவும் கமுகும் வளர்ந்து வளம் படுத்தும் வன்னி மண்ணில் தண்ணீரூற்றுக் கிராமத்தில் பிறந்தவர்.

வெற்றிவேலுவின் செல்வ மகன் அண்ணாமலையின் உயர் கல்வி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இடம் பெற்றது. புகையிரதப்பகுதியில் வேலைபெற்றுச் சிங்கப்பூர் சென்றார். அவரது வாழ்வை வாழ்வின் கொள்கைகளை அந்நாடு உருவாக்கிக் கொடுத்தது

சிங்கப்பூரில் இருந்து திரும்பிய அவர் இலங்கை அரசின் கீழ் விதானையார் வேலை பெற்றார். கிராம மக்களின் சுகதுக்கங்களில் பங்கு கொண்டு சிக்கல்களை நெறிமுறை வைத்து யாவரும் மதிக்கும் ஒரு பெருமகனாக வாழ்ந்தார்.

விதானையார் வேலையில் இருந்து ஒய்வுபெற்றபின்னும் அவரது உழைப்பு தங்களுக்குக் கிடைக்கும்படி மக்கள் ஒரு வழிவகுத்தார்கள். 1962ம் ஆண்டு முள்ளியவளைக் கிராம சபையின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். சேவையும் தொண்டும்தொடர்ந்தது

முள்ளியவளைக் கிராமசபையின் தலைவராக அவர் இருந்த காலத்தில் நடந்த ஆக்கவேலைகள் அநேகம். இதே காலத்தில் சமாதான நீதவான் ஆகவும் அவர் கௌரவிக்கப்பட்டார்.

தமது 87வது வயதில் திரு. வெற்றிவேலு அண்ணாமலை அவர்கள் இறைவனடி சேர்ந்த போது தண்ணீரூற்றுக் கிராமக்களின்ஒரு சகாப்தமோமுடிவடைந்தது.

—அப்பச்சி மகாலிங்கம்

# இன்று நல்லூரில் நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை இன்றுகாலை நல்லூரர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இக்குருபூசையில், வித்துவான் க சொக்கலிங்கம் சிறப்புரை ஆற்றுவார். பண்டிதர் நீ சி முருகேசு புராண படனமும் நல்லை ஆதீன குருமகா சன்னிதானம் ஸ்ரீ லஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் இன்னிசை விரிவுரையும் நிகழ்த்துவார். மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. அ. ஜே. செந்தில்நாதன் நன்றியுரை ஆற்றுவார், பகல் 12 மணிப் பூசையைத் தொடர்ந்து பிரசாதம் வழங்கப்படவிருக்கிறது. (ஈ)

# பளைப் பகுதியில் சமத்துவ வழிபாடு

(பச்சிலைப்பள்ளி)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல இந்து ஆலயங்களும் சமத்துவ வழிபாட்டுக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அறவழிப் போராட்டக் குழுவினர் திரட்டிய விபரத்தின் படி, பளைப் பகுதியில் சமத்துவ வழிபாட்டுக்காகத் திறந்து விடப்படாமலிருந்ததாகக் கருதப்பட்ட ஆலயங்களின் முகாமையாளர்களையும், அறவழிப் போராட்டக் குழு உறுப்பினர்கள் திரு. க. ஜீவதாஸ், திரு வி. எஸ். துரைராசா ஆகியோரையும் இணைத்து பளை உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணர் ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்திருந்தார்.

இக்கலந்துரையாடலில் ஆலய முகாமையாளர்கள், ஏற்கனவே குறிப்பிட்ட இந்து ஆலயங்கள் சமத்துவ வழிபாட்டிற்காகத் திறந்து விடப்பட்டுள்ளதாகவும், எச்சந்தர்ப்பத்திலாவது சமத்துவ வழிபாட்டிற்குத் தடையிருக்கமாட்டாதெனவும் உறுதி தெரித்தார்.

# இன்று பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை அறிவியல் பரப்புக் கனிஷ்ட சங்கத்தின் விஞ்ஞானப் பேச்சுப்போட்டியின் இறுதிப்போட்டி இன்று காலை கொக்குவில் பல் தொழில்நுட்பக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் யாழ் மாவட்டத்திலுள்ள பத்தொன்பது பாடசாலைகளில் இருந்து மாணவ, மாணவிகள் பங்குகொள்கின்றனர்.

இப்போட்டியில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்படு மாணவர், அடுத்த மாதம் 12ந் திகதி பண்டாரநாயக்கா தேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில் பங்குகொள்வர்.

# ஞானப்பிரகாசர் நினைவு முத்திரை

(கொழும்பு)

சுவாமி ஞானப்பிரகாசரின் முத்திரை அடுத்தாண்டுசேதய வீரர்கள் தினத்தன்று வெளியிடப்படும்; என தபால் தந்தி அமைச்சர் திரு. டி. பி. விஜயதுங்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் கூறினார்.

கல்வி அமைச்சரின் சிபாரிசுக்கமையவே இம்முத்திரை வெளியிடப்படுவதாக அமைச்சர் கூறினார்.

சுவாமி ஞானப்பிரகாசரின் ஞாபகார்த்தமாக முத்திரை வெளியிடுமாறு நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பாராளுமன்றத்தில்கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே.

# பத்தேகம எம். பி. காலமானார்

(கொழும்பு)

பத்தேகம எம். பி. திரு. ஈ. டி. விக்கிரமதிலகா நேற்றுக் காலமானார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி அங்கத்தவராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு. விக்கிரமதிலகா, சில காலமாக சுகவீனமுற்றிருந்தார். நேற்றுக் காலை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காலமானார்.

## விற்பனைக்கு

48 பரப்புக் காணி நீர்வேலி கரந்தன் வீதியில் அமைந்துள்ளது பலாலி வீதிக்கு அண்மையில் உள்ளது. S. நாகலிங்கம், ஊரெழு கிழக்கு, சுன்னாகம். 7457

3 ஸ்ரீ தொடக்கம் 11 ஸ்ரீ வரையுள்ள மொறிஸ் ஒக்ஸ்போட், மொறிஸ் மைனர், வோக்ஸ்வகன் கார்கள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு வாகனம் மாற்றவும், பினன்ஸ் வசதிகளும் செய்து கொடுக்கப்படும். பார்வையிடும் நாட்கள் சனி, ஞாயிறு. விபரங்களுக்கு: 81/2, மணிக்கூட்டுவீதி, (பெருமாள் சோவிலடி), யாழ்ப்பாணம். (7476)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] 68-ம் [illegible] 19 [illegible] வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QD 8948/78 [illegible] Eelanaadu [illegible] No. 69.
Grams Eelanaadu, Phone, 389